உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௨௮.] பிரமோதூத ஸ்ரீ வைகாசி மீ [பகுதி-௭.
Vol. XXVIII. *May–June 1930.* No. 7.

## சேரர் தாயமுறை.

### முன்னுரை.

சேரமன்னர் மருமக்கட்டாயமரபினைக் கையாண்டனர் என்பது பண்டைத்தமிழ் இலக்கியக்குறிப்புக்களால் அறியக்கிடக்கின்றதென்று காட்டிப் பாரதியாரவர்கள் செந்தமிழ் 27-ம் தொகுதி 4-ம் பகுதியில் ஒரு விரிவான கட்டுரை எழுதினார்கள். அதை மறுத்து அதேதொகுதி 10-ம் பகுதியிற் பண்டிதர். திரு. மு. இராகவையங்காரவர்கள் சேரர் மக்கட்டாயிகளேயாவர் என்று மற்றொரு நீண்ட கட்டுரை எழுதியுள்ளார்கள். உண்மைதெளியும் விருப்புடைமையினால், பண்டிதரவர்கள் காட்டும் வாதங்களுக்குப் பாரதியவர்களைச் சமாதானம் எழுதவேண்டும் என எம்மனோர் சிலர் வேண்டினோம். அவர்கள் செந்தமிழில் இருவர்கட்டுரைகளையும் நடுநிலையிற் படிப்பவர்களுக்கு உண்மைகாண்பது எளிதாகுமென்றும், இனைய தமிழ்ப்புலவரொடு தர்க்கிப்பது பொருள்வறந்த வசைவளரும் சொற்சண்டையாவதன்றிப் பயன்றராது என்றும் கூறி, எம் வேண்டுகோளை அறவே மறுத்துவிட்டார்கள். நூல்களிற்கண்ட சான்றுகள் சுட்டும் ... களை உவந்தேற்பதைவிட்டுத் தாம்கொண்ட மட்டுமே இங்கு நா— கொள்கைகளுக்குச் சான்றமைத்துக்காட்டியும், பிறரும் உண்மைகாணலாகுமென்று கருதாமல் தம்மைத்தாமே வியந்து மெய்ப்பணைத்தும் தமக்கே சிறப்புரிமையெனப் பெருமிதமூர்ந்தும், பிறர்பால் வடுவன்றி நலமெதுவும் காணாமல் மற்றவர்கொள்கைகளையெல்லாம் குற்றமே கூறியும் மகிழும் பண்டிதர்களோடு வாதப்போர் தொடங்குவது உண்மை

*

௭

யாராய்வார் உவப்பதொன்றில்லைத்தான். என்றாலும், திரு. மு. இராகவையங்காரவர்கள் நிரம்பிய நூற்புலமையும் நுணுகிய ஆராய்ச்சித்திறமும் உடையவரென மதிக்கப்படுபவராதலாலும், அவர் மறுப்புரையிற் சில வாதங்கள் ஆழ்ந்து ஆராயாது மேலளவில் இயல்குபவரை மயங்க வைக்கத் தக்கனவாமாதலாலும், பழஞ்சேர் தாயமாயின் உண்மையை உள்ளவாறு தமிழ்மக்கள் தெரியவேண்டுவது அவசியமாகலானும், அப்பொருள்பற்றிய அளவில் அவர்கள் மறுப்புரைவாதங்களில் முக்கியமானவற்றைச் சிறிது சீர்தூக்கி ஆராய விடைகொள்கின்றேன். "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண" முயலுவதே நடுநிலையாளர்கடமையாதலானும், புலவர்பலர் காட்டும் சான்றுகளைச் சமன்செய்து சீர்தூக்கி அளந்தறிவதற்குக் 'கோடாத் தகுதி'யெனும் ஒன்றே நற்கருவியாகுமாதலானும் என்போன்றாரும் இதில் உண்மைதெளிய முயலக்கூடும் என நம்பித் தமிழ்நூற்புலமை மிகுதியில்லாதேனும் இவ்வாராய்ச்சியிற் புகத் துணிகின்றேன்.

பாரதியாரவர்கள் உரைப்போக்கு, கேவலம் சரிதஆராய்ச்சித்துறை தழுவியுள்ளது. பண்டிதரவர்கள்கட்டுரை பெரிதும் பண்டிதர் கண்டன முறைமேற்கொண்டு நடக்கிறது. வஞ்சிமூதூர் மலைநாட்டில் மேல்கடற் கரைக்கண்ணதன்று, நீ நாட்டுக் கருவூரேயாகுமென்று இன்றுவரை நின்று வாதிக்கும் பண்டிதரவர்களை அங்கீகரிக்கச்செய்யுமாறு உண்மைகளை விரிக்க முயலுவது என்போன்றார்க்கியலாத அருவினையாகும். கடலணித்து வஞ்சியென்று விதந்துகாட்டும் பழைய இலக்கியக் குறிப்புக்களனைத்தையும் அபூதகற்பனைகளென்று பிறிதுரைத்து எளிதில் எடுத்தெறிந்துவிட்டு, ஊர் பேர் அறியாதார்பாட்டுக்கள் சிலவற்றைக் கொண்டு வஞ்சி உண்ணாட்டூரேயென்று துணிந்துகாட்டி, அதற்கு அப்புதுப்பாட்டுக்களேயன்றித் தம்மனோர் அபிப்பிராயமே சாலப் போதியது போலவும் ஐயங்காரவர்கள் இன்னும் வாசித்துவருகிறார்கள். காலஞ்சென்ற திருவாளர் பெத்தாச்சிசெட்டி[illegible] . அத்தலைமையாற் சிறந்த தற்காலக் கருவூரை அவர்மகிழப் பழையவஞ்சியெனக்கூறிவிட்டு, அதுமுதல் அக்கூற்றைமெய்ப்பிக்கச் சலியாது பொருதுவரும் பண்டிதரவர்கள் "சேரன்-செங்குட்டுவன்" என்னும் புத்தகத்தில் முக்கியமாக விளக்கமுயன்ற பொருள் மூன்று. அவையாவன:—வஞ்சிமூதூர் தற்காலக் கருவூர் என்பதொன்று; செங்குட்டுவன்காலம் கி. பி. ஒன்

றிரண்டு நூற்றாண்டளவிற்கு மிகவும் பிந்தியது என்பது இரண்டு. சேரர் மக்கட்டாயக் குலமரபுடையரென்பது மூன்று. இம் மூன்றும் முறையே மறுக்கப்பெற்றன. பாரதியாரவர்களும், தஞ்சை திரு. ஸ்ரீநிவாஸபிள்ளையவர்களும் பண்டிதர் திரு. நாராயணையங்காரவர்களும் ஆராய்ச்சிமுறையிலும் தர்க்கத்துறையிலுமாக வஞ்சி நடுநாட்டுக் கருவூரன்று, மேலைக்கடலடுத்த மலைநாட்டு ஊரே என்று நிறுவியுள்ளார்கள். செங்குட்டுவன்காலம்பற்றிய பண்டிதரவர்கள்கொள்கையைத் தஞ்சை திரு. ஸ்ரீநிவாஸபிள்ளையவர்கள் கண்டித்து விளக்கினார்கள். தாயமரபின் உண்மையைப் பாரதியவர்களே ஸமீபத்தில் விசதமாக்கினார்கள். எனினும் தாம் கொண்ட துணிவே தீர்ந்த முடிபென்று பண்டிதரவர்கள் இன்றும் வாதித்துவருகிறார்கள். தோல்வி துலைபல்லார்கண்ணுங் கொண்டு சால்பாளுவதைவிட்டு, பண்டிதரவர்கள் தம்மொத்த புலவர் ஆராய்ச்சியுரைகளின் உண்மையால் தம் புதுக்கொள்கை தோற்பினும் தாம் தொலையாத வாதப்போர்தொடருவதிற் சலியாத சொன்மலைவுவல்லுநராய்த் திகழ்கின்றார்கள். செங்குட்டுவன்காலத்தைப்பற்றி இன்னும் தாம் எழுதுவதாகப் பண்டிதரவர்கள் தாமே தம் "செங்குட்டுவன்" இரண்டாம்பதிப்பிற் கூறுவதால் அவர்கள் புத்துரையை எதிர்பார்த்து அமைந்திருப்போம். கருவூரே வஞ்சியென்ற வல்வழக்கைப் பற்றிப் புதுவாதம் எதுவுமின்றி இவர்கள் முன்கூறியதையே கூறிவருகின்றமையைப் பின் வேறொருகட்டுரையுள் விவரிப்பேன். தற்போது சேரர் பழந்தாயமுறையொன்றுபற்றிய பண்டிதரவர்களின் சிலகக்ஷிகளை மட்டும் ஈண்டாராய முயல்கிறேன்.

சேரர் மருமக்கட்டாயமரபினர் என்பதற் குரியவற்றைப் பாரதியாரவர்களும், மக்கட்டாயிகள் என்று வாதிப்பதற்கு வேண்டுவனவற்றைப் பண்டிதரவர்களும் முறையே விளக்கியுள்ளனர். இவற்றை ஒத்து நோக்குவார் உண்மைதெளியலாகும்; இவையனைத்தையும் ஈண்டு மீட்டும் விரிப்பதற்கு எனக்கு அவசியமும் அவாவும் இல்லை. இவற்றுள், பண்டிதரவர்கள்மறுப்புரையில், மயக்கவல்ல சில ஏதுப்போலிகளின் தன்மையைமட்டுமே இங்கு நான் தெளிவிக்க விடைகொள்வேன். அதுவும் பண்டிதவுலகுவக்கச்சொல்லும் பாண்டித்யமும் விருப்பும் இல்லாத நான், உண்மைகாடும் நடுநிலையோரை அவர்தம்முட் சிலரை மயக்கத்தக்க இரண்டொரு ஏதுக்களின் மருட்சியகற்றி அவற்றின் உண்மைநிலை அளந்தறியத்தூண்டும் ஒரே நோக்கத்திற்கு அவசியமான அளவே இவ்விசாரணையை நடத்த மேற்கொண்டமைவேன்,

### சரித்திர ஆராய்ச்சிகளுக்கு அடிப்படையான போதுவுண்மை.

இவ்வாதத்தில் மறவாமல் முதலாவதாகக் கவனிக்கவேண்டுவது, மக்கட்டாயத்தின் பழைமைபற்றிய பண்டிதரவர்களின் கொள்கையாகும். இது அவர்கள்மதத்துக்கே அடிப்படையாய் அவர்கள்கட்டுரைமுழுதிலும் ஊடுருவி ஊழ்த்துநிற்கும் கருத்தாகலான், அதன் உண்மையை முதலில் தெளியவேண்டும்.

பண்டிதரவர்கள்கூற்று வருமாறு:— "மக்கட்டாயமே தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு என்றும் நின்றுவரும் மரபாகும். சேரர் தமிழ் முடிவேந்தர் மூவருள் அடங்குவர். அதனால் அவரும் மக்கட்டாயிகளே ஆகவேண்டும். இன்றும் பண்டைக்காலத்துப்போலவே மேற்குமலைக்குக் கிழக்குள்ள அகன்ற தமிழகவரைப்பினில் எங்கும் மக்கட்டாயமே வழங்குகிறது. மேலைமலைநாட்டில்மட்டும் மருமக்கட்டாயம் ஆட்சி பெற்றுவருகிறது. அதனால் மருமக்கட்டாயம் புதிதாக அந்நாட்டில் வந்து புகுந்திருக்கவேண்டும்." இதுவே பண்டிதரவர்களின் அசையாத கொள்கையென்று அவர்கள் கட்டுரை தெளிக்கின்றது.

ஆனால், சரிதநூலறிஞர் அனைவருக்கும் இது பொருந்தாவாதம் என்பது ஒருதலை. மக்கட்சமுதாயமெல்லாம் முதலில் தாய்வழித் தாயம் மேற்கொண்டிருந்து, பின் நாளடைவிற் பலவகுப்பினர் தந்தைவழித்தாயிகளாகியுள்ளார்கள் என்பதே தற்காலம் மதிநுட்பம் நூலோடுடைய ஆராய்ச்சியாளரனைவர்க்கும் ஒப்பமுடிந்ததோர் சரித்திரவுண்மையாகும். ஆகவே, தமிழரும் மக்கட்சமுதாயத்தில் அடங்குவதால், அவருள்ளும் ஆதியில் மருமக்கட்டாயமே பழவழக்காய்நின்று, பிறகே மக்கட்டாயம் மேற்கொள்ளப்பட்டிருக்கவேண்டுமென்பது சரிதநூன்முறையிற் போதருவதாகும். இம்முறையில் மருமக்கள்வழி அறவே தற்காலத்தமிழகத்தில் யாண்டும் வழக்கற்று மக்கள் வழிமுறையே எங்கும் நிரந்தரமாகக் கையாளப்படுமாயினுங்கூட, அது காலக்கிரமத்திற் பிந்திவந்தேறிய மரபுமாற்றம் என்று துணியவேண்டியது இயல்பாயிருக்க, மருமக்கட்டாயமுடைய தமிழருக்கும் அத்தாயம் புதுவழக்கெனவாதிப்பது சரிதவுண்மைக்கு மாறாகும். மருமக்கட்டாயிகளைப்போலவே மக்கட்டாயத் தமிழரும் தம் வாரிசு (வழித்தோன்றல்)களை மருகர் எனுஞ் சொல்லாற் குறித்துவரும் நூன்மரபும் தமிழ

ருக்குப் பழமையானவழக்கு மருமக்கட்டாயமே என்பதை வலியுறுத்து கிறது. இப்பொதுவுண்மையுமேயன்றித் தற்காலத் தமிழுலகில் மக்கட்டாயிகளான சோழ பாண்டிய நாட்டவருள்ளும் பலவிடங்களிற் பல வகுப்பினர் வழக்கிழந்த தம் பழைய தாய்வழிமரபின் பழக்கவழக்கங்கள் சிலவற்றை இன்னும் மறவாமற் கையாண்டுவருகின்றனர் என்று சரிதநூலுணர்வார் தெளிக்கின்றனர். இது, கேவலம் சில தமிழிலக்கிய வாக்கியங்களைமட்டும் வாட்டி வலித்துக்கொண்டு வரையறுக்கக்கூடியதன்று; உலகில் மக்கட்சமுதாயச் சரிதநூல் ஆராய்ச்சியாளரனைவரும் கண்ட பொதுவுண்மையாகும். கேவலம் நாட்டில் வழங்கும் பழைய கொள்கைகளெல்லாம் சரிதம் எனக்கொள்ளுவது ஆராய்ச்சித்துறையன்றெனப் பண்டிதரவர்களின் ஆராய்ச்சியுரைகளே பலபடியாக வற்புறுத்தி வருகின்றன. எனவே, தமிழுலகில் நாமறியும் பகுதிகளில் மக்கட்டாயம் வழங்குவதைமட்டும் கொண்டு, நாம் பழகாத வேறொரு பகுதியில் வழக்குடைய மருமக்கட்டாயமுறை புதியதென வாதிக்க வழியில்லை. சமீபத்தில் 'நாயர்திட்டமுறை' என்ற புதிய சட்டங்களேற்பட்டு, மலையாளதேசத்திலும் மக்கட்டாயமுறைகள் விரைவாக இடம்பெற்றுவருவதை நாம் அறிவோம். இன்னும் சில தலைமுறைகளில் நாயர் சமுதாயத்தாரனைவருமே மக்கட்டாயிகளாகிவிடலாம். அதன்பிறகு அவர்களிடை விளங்கும் புதுமுறையைக்கொண்டு மக்கட்டாயமே நாயர்மக்களனைவர்க்கும் அநாதியானவழக்கென வாதிப்பவரைச் சரிதமறிவார் எவ்வாறு கருதுவர்? ஆதலால், தற்காலம் நமக்கெட்டிய சான்றுகளால் நாம் துணியக்கூடியதெல்லாம், சங்கஇலக்கியகாலத்துக்குமுன்னரே கீழ்நாட்டுத் தமிழர் பெரும்பாலும் மக்கட்டாயிகளாகிவிட்டார்கள் என்பதளவேயாகும். இதற்குமேற் சரித வுண்மையறிவெட்டியவரை தாய்வழித்தாயமே கையாண்டுவரும் மேலைமலைநாட்டுத்தமிழருக்கு அத்தாயம் புதிதெனத் துணிதற்கு நியாயமில்லை. அது புதிதென்பார் அதன் புதுமையை நிறுவுதற்குத் தக்க சரிதவுண்மைச்சான்று காட்டும்வரை, அதை ஆளுபவருக்கு அது அநாதிவழக்கெனக்கொள்ளுவதே ஆராய்ச்சி முறையாகும்.

## சேரர் குலமரபு.

இனிப் பண்டிதரவர்கள் தம் மதம் நிறுவ இம் அந்தரப்பந்தருக்கு அமைத்த கால் மூன்று. அவையாவன:—பதிற்றுப்பத்துச்சேரர்

பலவூர்களில் ஒருகாலத்தில் ஆண்டவர்கள் என்பது ஒன்று; தேவிச் சொல் மகள்முறை காட்டவல்லதென்பது இரண்டு; தொல்காப்பியம் முதலிய பழையநூல்களில் மருமக்கட்டாயம் துலக்கப்படவில்லை யென்பது மூன்று.

## I. முதற்றூண்.

அவற்றுள்ளும் முக்கியமானது, பதிற்றுப்பத்திற் பாராட்டப்படும் சேரமன்னர் ஆட்சிமுறைபற்றிய பண்டிதரவர்களின் அபூதசிருஷ்டியே. தமிழகத்தில் முடிமன்னர்தங் குடிதோறும் சமகாலத் தாயத்தார் பலர் பலவூரில் ஒருங்கே இறைமைபூண்டு முறைசெய்தனர் என்றும், அதுபோலவே சேரநாட்டிலும் வஞ்சி, தொண்டி, மாந்தை முதலிய பலவூர்களைத் தமக்குத் தலைநகரங்களாகக்கொண்டு, பலசேரர் ஒருகாலத்தில் மலையாளப்பிரதேசம், பூழிநாடு, கொங்குநாடு, தொண்டிக்குடநாடு, இடைக்கொங்கடங்கிய சேரமண்டலம் என்பவற்றைத் தனித்தனியே ஆண்டனரென்றும், அவ்வாறுகொள்ளாக்கால் அநேக அசங்கதங்கள் ஏற்படுமென்றும் பண்டிதரவர்கள் பலபடியாக வற்புறுத்தி விரிக்கின்றார்கள். சிலகாலம் சிற்றூர்களில் முடிவேந்தர் குடிப்பிறந்தார்சிலர் குலத்தலைவரான கோமன்னருக்கடங்கி இறைமையுரிமை தமக்கின்றி இளவேந்தராய்த் துணையாட்சி செய்திருக்கலாம். இதுகொண்டு இன்னவரை அந்நாட்டுக் கோவேந்தராகக் கொள்ளற்கில்லை. தலைநகரில் தனியாளும் முடிவேந்தரை மலைந்துவென்று வலிந்து நாடுகவர்ந்து தம்முரிமைத் தனியாட்சி நிறுவினாலன்றி, சிற்றூர்களில் துணையாளு மிளங்கிளைஞரை, அப்பெருநாட்டு முடிவேந்தரென, மூதூரிற் றனியாளுந் தலைவரோடு ஒருபடிவைத்தெண்ணுவது தவறாகும். இதன் உண்மை ஒருபுறம் நிற்க. இங்கு நாம் இவ்வாராய்ச்சியில் விசாரிக்கவேண்டியதெல்லாம் பதிற்றுப்பத்துச்சேரரைப்பற்றிய அளவேயாகும்.

பதிற்றுப்பத்திற் பாடப்பெறுபவர் மருமக்கட்டாயிகளாய் வஞ்சியிலாண்டிருந்தல் அமையாதென்று பலகூறிப் பாரதியாரவர்கள் கட்டுரையைப் பழிதூற்றி, அதனாலேயே மக்கட்டாயத்தை நிலைநிறுத்திவிடப் பண்டிதரவர்கள் முயல்கின்றார்கள். அதனால் இதுபற்றி அவர்கள் கூறுவதைச் சீர்தூக்கியளப்பது நமது முதற்கடனாகும்.

## I. பதிற்றுப்பத்துச்சேரர்

### மலைநாடுபிரித்தாண்ட ஒருகுடிப் பல்கிளைப் பலமன்னரா ?

முடிகெழுவேந்தர் மூவர்குடியிலும் தாயத்தார் இப்படியே சேர சோழ பாண்டியநாடுகளைப் பலகாலும் தம்முட் பங்கிட்டு ஆண்டுவந்தனரா? என்ற பொதுவிசாரணை ஈண்டு எழவேண்டா. 'பதிற்றுப்பத்தின் பாட்டுடைத்தலைவர் பதின்மரும் பண்டிதரவர்கள் கூறுகிறபடி ஒருகாலத்திற் பலவூர்களிலிருந்து சேரர்குல ஞாதிக்கிளையினராய்ப் பல நாடுகளை ஆண்டவரா? அன்றிக் குடபுலத்தை ஒருமொழிவைத்தாண்ட கோச்சேரர்குடியில் வரன்முறையே கோலோச்சிப் புகழ்படைத்த வழித்தோன்றல்களா?' என்பதொன்றே ஈண்டு நாம் எடுத்து ஆராயும்பொருளொடு பொருந்த ஆராயவேண்டுவது. இத்தலைப்பின்கீழ்ப் பண்டிதரவர்கள் எடுத்தாளும் முக்கிய வாதங்களை முறையே ஒருவழியாக ஆராய்ந்து பார்ப்போம்.

'நெடுஞ்சேரலாதனும் அவன்மகனான செங்குட்டுவனும் கோச்சேரர் தாய்க்குடியின் தலைவராய்க் கொங்கர்கோக்களாய்க் கொங்குநாடடங்கிய சோமண்டலத்தை அக் கொங்குநாட்டூரான வஞ்சியென்ற கருவூரிலிருந்தும், குட்டுவன் என்ற பெயர்க்குறிப்பாற் செல்கெழுகுட்டுவன் குட்டநாடென்ற மலையாளநாட்டைப் பெயர்கூறப்பெறாத ஓர் ஊரிலிருந்தும், நார்முடியும் அவன் ஒரு வயிற்றுத்தம்பியான ஆடுகோட்பாட்டுச்சேரலாதனும் பூழிநாட்டை மாந்தைப்பட்டினத்திலிருந்தும், இரும்பொறைக்கிளைச்சேரர் செல்வக்கடுங்கோ முதலிய மூவரும் தொண்டிசூழ்ந்த குடபுலத்தைத் தொண்டிநகரிலிருந்தும், முறையே சமகாலத் தரசாண்டு வந்தனர்' என்று பண்டிதரவர்கள் அட்டவணைமுறையில் இதை விவரிக்கின்றனர்*. இவ்விவரங்களுக்குஇவர்கள் யாதோராதாரமும் விளக்கினார்களில்லை. ஆனால் ஆழச் சிந்திப்பார்க்கு இக்கருத்துக்கள் அடியற்ற அபிப்பிராயமேயாம் என்பதைப் பண்டிதரவர்கள்கொண்ட குறிப்புக்களே காட்டுகின்றன.

---

*சேரன்செங்குட்டுவன் பக்கம் 20–155–179. செந்தமிழ். தொகுதி 27. பக்கம் 350–351.

முதலிற் குட்டுவன், பொறையன், மலையன், கொல்லிக்கோமான், கொங்கர்கோ, பூழியன் என்ற பெயர்களெல்லாம் எல்லாச் சேரருக்கும் வேற்றுமையின்றிப் பொதுப்பெயராக வருவதால், அப்பெயர்களைக் கொண்டு இச்சேரர் தமக்குள், குடபுல நாடு ஆறு மலைகளைப் பிரித்துக் கொடுத்து, அவரவரை வெவ்வேறுபகுதியைத் தனியாளச்செய்ய இடமில்லை. குட்டுவன் என்றபெயர் செல்கெழுகுட்டுவற்கும் பெருஞ்சேரலிரும்பொறைக்கும் செங்குட்டுவனுக்கும் பொதுவாதல்கண்டும், அப்பெயர்கொண்டு குட்டநாட்டில் ஒருவற்குத்தனியாட்சிதந்து மற்றவருக்கு அதில் உரிமை அறவே மறுப்பதற்கு நியாயமில்லை.

இனி இரண்டாவதாகக் கொங்கு பூழி நாடுகளையும் கொல்லிமலையையும் சேரமன்னர் படையெடுத்து வென்றுகொண்ட பெருமையுடையராகப் பல பழம்பாட்டுக்களும் குறிப்பதனால், அந்நாடும் மலையும் சேரருக்கு அநாதியாகச்சிறந்த தொல்லுரிமைநாடும் மலையும் அன்றென்பது விசதமாகிறது. கொங்குநாடும் கொல்லிமலையும் பண்டிதரவர்கள் கொண்டபடி தலைமைச்சேரர் தாய்க்குடியில் இமயவரம்பன் அவன்மகன் செங்குட்டுவன் முதலியோர்க்கு அடிப்பட்ட தலையுரிமைநாடும் மலையுமாமேல், அவற்றை அவர் பொருதுவென்று பெருமிதம்கொள்ளுவது* விபரீதமன்றோ? அன்றியும், அவரைச்சார்ந்து பணிந்து பாராட்டி வாழ்வதற்குரிய அவர்கிளைத் தாயச்சேர இளமன்னராய செல்கெழுகுட்டுவனும் செல்வக்கடுங்கோவும் பெருஞ்சேரலிரும்பொறையும் தங்குலத்தலைவருக்குரிய அக்கொங்குநாட்டையும் கொல்லிக்கூற்றத்தையும் முற்றி அகப்படுத்திய மெய்க்கீர்த்தி கேட்டு மகிழ்வது† இயல்பாமா? அதுவுமன்றிக் கொங்குநாட்டிற்குப் பண்டிதரவர்கள் சிறப்புரிமைதரும் நெடுஞ்சேரலாதனைக் 'கொங்கர்கோ'னென்று குமட்டூர்க்கண்ணனார் அவனைத் தாம்பாடிய பத்துப்பாட்டில் யாண்டும் குறியாததும், அந்நாட்டுக்குரிமையற்ற பிறிதுநாடாளும் கிளைச்சேரரான இரும்பொறைகள் 'கொங்கர்கோ' என்று விதந்துபாடப்பெறுவதும் வியப்பாமன்றோ?‡ அதுபோலத் தொண்டியாண்ட இரும்பொறையை நார்முடிக்குரிய 'மாந்தையோர்

---

*சிலப். 25. 153., பதிற். 5. பதி.

†பதிற். 22, 77, 80 பதி.

‡பதிற். 88, 90.

பொருநன்' என்று பெருங்குன்றூர்கிழார் பாடியதும் பொருளற்ற மருளுரையாகவன்றோ முடியும்? இன்னும் இப்படியே பூழிநாடாட்சிக்குப் பண்டிதாவர்கள் தனியுரிமைதரும் நார்முடிச்சேரல், தனக்குரிய பூழிநாட்டைத் தான் படையெடுத்துக்கொள்ளுதற்கும், அவர்களால் அதற்குரிமைமறுக்கப்படும் செல்கெழுகுட்டுவனும் இரும்பொறைகளிருவரும் 'பூழியர்கோ' என முறையே பாராட்டப்பெறுதற்கும்* நியாயம்உண்டா?

இன்னும் பூழிநாடு சேரர்தலைவரான வஞ்சித்தாய்க்குடிச் சேரருக்குச் சம்பந்தப்படாமல் நார்முடிச்சேரலுக்கு முன்னுரிய நாடாயிருந்தது என்றும், அதனை நன்னன் வென்று வலிதிற் கொண்டான் என்றும், அதனால் அச்சேரலன் தான் மணிமுடிசூடாற்கின்றி நார்முடிபுனைந்து நன்னனொடுபொருது அவனை அழித்துத் தன்னாட்டை மீட்டுக்கொண்டு ஆண்டனன் என்றும் பண்டிதாவர்கள் கூறுகின்றூர்கள். இவ்விவாங்களுக்கெல்லாம் இவர்கள் கண்டுகொண்ட ஆதாவுகளைப் புலப்படுத்தவில்லை. முன் சரிதவுணர்ச்சியற்ற யாராவது கூறிவைத்த வுரைகளை விசாரணையின்றி அப்படியே மீட்டுங் கூறுமுறைதவிர வேறு தக்க ஆதாரம் இக்கருத்துக்களுக்கு எதுவுமே காட்டப்படவுமில்லை. நான்காம் பத்துப்பதிகம் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலை, "பூழிநாட்டைப் படையெடுத்துத் தழீஇ,.......................................பெருவாயில் நன்னனை நிலைச்செருவினுற் றலையறுத்து,...........அவன்...........வாகை தடிந்து,...........செருப்பல செய்து செங்களம் வேட்டு...........வளம்படு வென்றி" கொண்டவனுகமட்டும் கூறுகின்றது. மற்றப்படி பூழிநாடு முன் நார்முடிச்சேரலனுக்குரியதென்றுவது, நன்னன் அதனை அவனிடமிருந்து வலிதிற்கொண்டதாகவாவது எனைத்துவகையானும் ஒரு சிறிதும் குறிக்கப்படவேயில்லை. கல்லாடனுரின் அகப்பாட்டில் (199) "நன்னற்பொருது, வலம்படு கொற்றம் தந்த வாய்வாட், களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல், இழந்தநாடுதந்தன்ன, வளம்பெரிது பெறினும் வாரலென் யானே" என்ற தொடரிற் பூழிநாடு குறிக்கப்படவுமில்லை. இந்நிலையில் நன்னனுக்கு நார்முடியை நாடிழக்கவைப்பதுமன்றி, அப்படி இழந்தநாடு பூழிநாடெனவும் கொள்ளுவானேன்? நன்னனைப் போர்க்களத்தில் நார்முடிச்சேரல் வென்று கொன்றதனுற் பூழிநாடுமட்டுமென்றி

*பதிற் 4. பதி., 21, 73, 84-90.

நன்னனுக்குரிய நாடெல்லாம் அச்சேரலன் கொண்டவனுவனன்ருே? நன்னன்பால் நார்முடி அவ்வாறு வென்றுகொண்ட பலநாடுகளிற் பூழி நாடுமட்டும் முன் தான் வைத்திழந்த அவன் தொல்லுரிமைநாடென்று கொள்ளற்குரிய குறிப்புத்தான் எதுவோ? அன்றியும், நன்னன் வெற்றி களை விரித்துக்கூறும் பழங்கவிகள் பல கிடைக்கின்றன. அவற்றுள் ஒன்றேனும் நார்முடிச்சேரலனை நன்னன் வென்று பூழிநாடகப்படுத்தி வெளவிய விருது கூறப்பெறவில்லை. குறுமன்னர் சிலரை அவன் அடர்த்ததனைப் பெரிதாக்கி அவனைப்பாடிய புலவரெல்லாம் கோச்சேரர் குலவேந்தை அவன் வென்று அவன் பழநாடுகொண்ட பெருவெற்றி யைப் பாராட்ட அறவே மறந்தனரா ?

இதுவுமன்றிப் பண்டிதாவர்கள்கொள்கைப்படி நார்முடிச்சேரல் வஞ்சியாண்ட கோச்சேரன் இமயவரம்பன்மகனுவன். பூழியை முன் வழிமுறையே ஆண்டுவந்த வேருேர் கிளைச்சேரர்குடிப்பிறந்த மகனு மல்லன். பூழிநாடோ வஞ்சிச்சேரருக் குரியதன்றென்று பண்டிதாவர் கள் கூறுகிருர்கள். ஆகவே நார்முடிக்கும் தன்பிறப்பால் அந்நாட்டில் தொல்லுரிமை கிடையாது. நார்முடிக்குமுன் அதனை ஆண்டவர் யார்? அவன் யாரிடமிருந்து அதனை வென்றுகொண்டான் ? அன்றி, அவன் பிறக்குமுன் பூழிநாடு வஞ்சிச்சேரருக்குரித்தாகிச் செங்குட்டுவனுக்கு வஞ்சியைத் தாவிரும்பிய இமயவரம்பனுல் நார்முடிக்கு அது அளிக்கப் பெற்றது எனக்கொண்டாலோ, அது வஞ்சிச்சேரருக்குப் பூழிநாட்டில் உரிமைகிடையாதென்ற பண்டிதாவர்களின் மூலக்கொள்கையோடு முழு தும் முரணுவதாகும். புதிதாக நார்முடி பூழிநாட்டை நன்னன்பாற் கவர்ந்தாண்டு பின் அதனை நன்னன் மீட்டும் வென்றுகொண்டிருந்தால் நார்முடிக்கு அஃது அவன் இழந்துமீட்டிய பண்டுரிமைப் பழநாடாக பாராட்டப்படுமாறில்லை, இனைய பல அசங்கதங்களுக்குத் தக்க சமாதானங் காணல் அரிது, "இழந்த நாடு தந்தன்ன வளம்பெரிது பெறினும்" என்ற தொடருக்கு 'இழந்ததை மீட்டும் பெற்றவரடையும் பெருமகிழ்வொத்த இன்பந்தரும் பெருவளம்' என்பதுமட்டுமே பொரு ளாகக்கொள்ள அமையும். எப்படியாயினும் இத்தொடரைக்கொண்டு பூழிநாட்டில் நார்முடிக்குத் தனித்தொல்லுரிமை நாட்டுதற்கு இட மில்லை,

உண்மையிற் பூழிநாடும் வஞ்சிச்சேரர்க்குரிய சேரமண்டலத்துள் அடங்கினதேயாகும். ஒருகால் அதைப் பகைமன்னர் கைக்கொள்ள, நார்முடி வஞ்சிக்கோச்சேரனாகவோ அல்லது அக்குடியில் இளங்கோவேந்தாகவோ வஞ்சியரசின் சார்பாக அதைப் படையெடுத்து வென்று மீட்டிருக்கலாம். வஞ்சியரசுக்குப் பூழிநாடு முன்னில்லாதவரை, அக்குடிப் பிறந்த நார்முடிக்கு அந்நாட்டில் உரிமை வருமாறில்லை. ஆதலால் இந்நிலையில் இனைய பல பழம்பாடற்குறிப்புக்களால் தெளியக்கூடியதாவது:—வஞ்சிச்சேரர் பலநாடுகளை வென்றுகொண்டு புகழ்படைத்தமையால், அவ்வந்நாட்டுப் பெயரோடு புணர்த்தி அவ்வஞ்சிச் சேர அரசருக்கே சிறப்புப்பெயர்கள் வழங்கலாயின என்பதொன்றேயாகும்.

இன்னும், பதிற்றுப்பத்துப் பாட்டுடைச் சேரர் பதின்மரும் வழிமுறையே வஞ்சியாண்ட மன்னராதல்வேண்டும் என்பதை விளக்கும் வேறொரு நியாயமும் இருக்கிறது. பகைவரைவென்று அவர்நாட்டிலிருந்து வாரிக்கொண்டு மீண்ட பொருள்வளத்தை மன்னர் இரவலர்க்கும் பரிசிலர்க்கும் வரையாது வழங்கி வண்மைப்பெருவேள்விசெய்யுங்கால், தத்தம் தலைநகர், அல்லது அதையொத்த தமக்குரிய பெருவிறன் மூதூர்களிலேயே அதனைச் செய்யவிரும்புவது இயல்பாகும். தம் தலைநகரையும் தாம் ஆளும் பேரூர்களையும் விட்டொழித்து, வேறு ஒன்றிலார் எட்டிய தாயத்தார் பிறமன்னர் ஆளும் அயலூர்களிலே தாம் வண்மையறம்வளர்த்து ஈத்துவப்பர் என்பது அசங்கதம். பண்டிதரவர்கள் கொள்கையின்படி:— இமயவரம்பன் வஞ்சிச்சேரன். வஞ்சியோ இடைக்கொங்குநாட்டுள்ளது. மாந்தையோ மேலைக்கடற்கரையிற் கோளத்தின் வடக்கோரப்பட்டினமாய் நார்முடியும் அவன்தம்பியும் ஆண்ட நகராம். தொண்டி அதன்தெற்கே அக்கடற்கரையில் இளம்பொறைக்கிளைச்சேரர்கள் ஆளும்ஊராகும். இப்படியிருக்க, மேனாட்டு இளஞ்சேரலிரும்பொறை தான் வென்றுகொண்ட கொண்டிப்பொருளையெல்லாம் மலைதாண்டிக் கிழக்கே கொங்குநடுநாட்டு "வஞ்சிமுதூர்த் தந்துபிறர்க் குதவியும்" (பதிற். 90), நார்முடியின் தம்பியான மாந்தையாண்ட ஆடுகோட்பாட்டுச்சேரலன் வடநாட்டிற் றான் வாரிவந்த பெரும்பொருளைத் தன் மாந்தையில் ஏழையர்க்கீவதைவிட்டுத் தெற்கே நெடுந்தூரஞ்சென்று ஞாதிப்பிறமன்னர் தலைநகரான "தொண்டியுட்டந்து கொடுப்பித்தும்" (பதிற். 60.), வஞ்சிச்சேரனான இமயவரம்பன், வடவாரியர் யவனரன்ன தன

பகைவரை வணக்கி அருவிலை நன்கலம் வயிரமொடுகொண்டு மீண்டு 'ஒன்னார் பணிதிறைதந்த' நிறைபக் குவைஇய பாடுசால் பெருநிதியைத் தனக்குரிய வஞ்சிமூதூரை விலக்கி மேற்கே நெடுமலையேறிச்சென்று குடகடலடுத்து மாந்தைமுற்றத்துக் கொணர்ந்து கொடுப்பித்தும் (அகம்-127), மகிழ்ந்தனர் என்று சங்கப்புலவர் பாடியுள்ளனர். இன்னும் இப்படியே இளஞ்சேரலிரும்பொறையை "அருந்திறன் மரபிற் பெருஞ்சதுக் கமர்ந்த-வெந்திறற் பூதரை"த் தன் தொண்டியை விலக்கி "வஞ்சிபுட்டந்து மதுக்களவேள்விவேட்" டெயர்ந்தவனாகப் பழம்புலவர் பலர் புகழ்ந்துள்ளார்*. இவ்வாறு இப்பெரும்புலவர்தரும் குறிப்புக்கள் பண்டிதரவர்கள்கருத்தை மறுக்கின்றன. உண்மையில் இக்கோச்சேரர் பதின்மரும் வழிமுறையில் வஞ்சிபாண்ட கோமன்னராவர். இவரொவ்வொருவரும், தொண்டியும் மாந்தையும் பிற பழவிறன்மூதூர்களும், குட்டம், குடம், பூழி, கொல்லிக்கூற்றங்களும் அடங்கிய சேரநாடுமுழுவதையும் ஆண்ட பெருமன்னர் என்று கொள்ளுவமேல், இச்சங்கப்புலவர்பாட்டுக்கள் மிகவும் செம்பொருளுடையவாய்ப் பொய்யில்காட்சியோர் பொருளுரையாகின்றன. அல்லாக்கால் அவையனைத்தும் தெருளாப்புலவர் மருளுரையாகிமுடியும்.

## II. சேரர் வயதுபற்றிய சேப்பிடுவித்தை.

இனி, பதிற்றுப்பத்துச்சேரர் சிலரின் வயதைவைத்துப் பண்டிதரவர்கள் ஒரு வேடிக்கை விவகாரம் உண்டுபண்ணுகிறார்கள். செங்குட்டுவன், நார்முடி, ஆடுகோட்பாட்டுச்சேரலாதன் இம்மூவரும் முறையே 25, 55, 38 ஆண்டுகள் நாடாண்டனர் என்று பதிற்றுப்பத்துப் பதிகங்கள் கூறுகின்றன. இவர்கள் மூவரும் இமயவரம்பன்காலத்திலேயே பிறந்து பருவமடைந்துவிட்டவரென்றும், இமயவரம்பன்காலத்தில் இவர்களுள் செங்குட்டுவனுக்கு ஆண்டு 20 ஆகியிருக்கவேண்டுமென்றும், நார்முடி அவனுக்கு முற்பட்டவனாதலால் அவனுக்கு வயது 25ம் அவன் தம்பி ஆதனுக்கு வயது பதினைந்துமாவது ஆகியிருக்கவேண்டுமென்றும் முதலில் வரையறுத்துக்கொள்ளுகிறார்கள். அதன்மேல் இமயவரம்பனுக்குப்பிறகு அவன்தம்பி செல்கெழுகுட்டுவன் 25 ஆண்டு நாடாண்டிருப்பதால், அதன்பிறகு முறையே இம்மூவரும் வஞ்சியில்

* சிலப்பதிகாரம், காதை 28, வரி 147, 148. பதிற்றுப்பத்து ஒன்பதாம் பத்துப் பதிகம்.

வழிமுறையில் ஆண்டிருக்கமுடியாதென்று காட்டி மருமக்கட்டாயத்தை வாட்டித் தம்கொள்கையை நாட்டிவிட்டதாக வாதிக்கிறார்கள். இவர்கள் கொண்டமுறையில், நார்முடி குட்டுவனிறந்தபிறகு அவனாண்ட ஆண்டு 25 கூட்டிக் குறைந்தது 50 வயதுக்குமேலும், செங்குட்டுவன் அவனுக்குப்பின் 20+25+25=70-வது வயதளவிலும், சேரலாதன் 15+25+25+50=115 வயதிலும் பட்டமெய்தியதாக முடியும். ஆகவே, இவர்கள் மருமக்கட்டாயிகளாக வஞ்சியில் வழிமுறையாக ஆண்டிருத்தல் கூடாதென்றும், மக்கட்டாயமாயினாகவேண்டுமென்றும் முடிவு கட்டி வாதிக்கப்புகுகின்றார்கள். புகுந்தவுடனே, இச்சேரர் மக்கட்டாய முறையில் ஆண்டவரானாலுங்கூட, இவர்தம் வயதளவும் ஆட்சிக்கால வளவும் மாற்றலாகாமையால், ஆண்டும் இவ்வசங்கதம் தம் மக்கட்டாய வாதத்தையும் வருத்தவருவதைக் காண்கிறார்கள். கண்டு இச்சேரரைப் பலவேறுநாடு தனியேறியாண்ட சமகாலப் பார்த்திவராக முடிசூட்டிவிடுகின்றார்கள். இவரைப் பலநாடு பகுத்தாளவைத்துக் கால அசங்கதங்களைக் களைவதானால், பிறகு அசங்கதமேயில்லாதபோது அப்புகலை வைத்து இச்சேரர்தாயமரபை மாற்றுவானேன்? அசங்கதவாதத்தால் மருமக்கட்டாயத்தை அடர்க்க எத்தனித்து, அது தம் மக்கட்டாயத்தையும் தாக்கக்கண்டு இப்பத்துச்சேரரையும் பலநாடு பிரித்தாளவைத்துத் தாம் எழுப்பிய அசங்கதப்பூதத்தை ஆற்றியமைக்கிறார்கள். பலவேறு நாடாட்சி ஒன்றே அசங்கதப்பேயை விரட்டியபிறகு, இச்சேரர் மக்கட்டாயிகளாகித் தீரவேண்டிய அவசியத்தைக் காணவில்லை. மருமக்கட்டாயிகளாகவும் இவர்கள் ஒருகாலத்திற் பலவேறுநாடுகளில் ஆண்டிருத்தல் அமையும். இவர் நாடாட்சியுண்மை எதுவாயினும், இக்கால அசங்கத வாதத்தால் இவரை மக்கட்டாயிகளாகத் துணிதற்கில்லை என்பது வெளிப்படை. இன்னும் பண்டிதரவர்களின் இம்முடிவு இன்றியமையாததென்று கொள்ளத்தக்க நூற்சான்று காணுவமேல் அவர்கள் சொல்லுகிற அசங்கதங்களைக் களையவேண்டுவது அவசியமாகலாம். ஆனால் இதற்குப் பண்டிதரவர்கள்காட்டும் ஆதாவுகள் ஒன்றேனும் இவ்வசம்பவ முடிவு எதுவும் காட்டவரக் காணவில்லை.

முதலில், இளமையிலேயே அரசரெல்லாம் பட்டமடையவேண்டுமென்ற நியதி இல்லை. இக்காலத்திலும் கொச்சி, திருவாங்கூர், கோழிக்கூடு முதலிய மருமக்கட்டாயநாடுகளொவ்வொன்றிலும் பலப்பலர் ஐம்

பது அறுபது வயதாகியும் நாடாட்சிக்குரியராய்க் காலத்தை எதிர் பார்த்து முறையே ராஜபட்டத்துக்குக் காத்திருக்கும் இளவரசர்களின் முதிர்ந்த வயதுகளை நாம் நன்கறிவோம். மக்கட்டாய வழியினையுடைய ஆங்கில அரசிலும் இரண்டுமூன்றுதலைமுறையாக அரசர் ஐம்பது அறுபது ஆண்டுகளுக்குமேலேயே காத்திருந்து பட்டமெய்திவரக் காணுகின்றோம். எனவே இளமையிற் பட்டமெய்தமுடியாத ஒருகாரணங்கொண்டு தாயமுறை சம்பந்தமாக ஒருவிதமுடிவும் கொள்ளுதற்கில்லை.

இனி நம் ஆராய்ச்சிக்குச் சம்பந்தமான சேரர்களின் அறமுதிர்ந்த அசம்பவ வயதளவிற்குப் பண்டிதரவர்கள் காட்டும் ஆதாவுதான் என்ன? இமயவாம்பனுக்கு நார்முடி முதலிய மூவரும் மக்கள் என்று கூறுகிறார்கள். மக்களா? மருமக்களா? என்பதே வாதமாகையால், அதில் எதையும் வேறு தக்க சான்றுகொண்டு நிரூபிக்கவேண்டுமேதவிர ஒருவித முடிவுபண்ணிக்கொண்டு வாதிப்பது முறையில்லை. இதற்குமேல் இமயவரம்பன்காலத்தில் இம்மூவரும் பருவமடைந்த மக்கள் என்பது எதனாற் போதருகிறதோ அதுவும் புலப்படவில்லை.

இன்னும், நெடுஞ்சேரலாதன்காலத்தில் நார்முடி, செங்குட்டுவன், ஆடுகோட்பாட்டுச்சேரல் என்ற மூவருமே பிறவாமற்கூட இருக்கலாம். ஆதனுக்கு இவர் மக்களெனக்கொண்டால்மட்டும் பண்டிதரவர்கள் கருதும் வயது ஆட்சிக்காலவளவுகள்பற்றிய அசங்கதங்கள் எழக்கூடும். அவனுக்குஇவர் மருமக்களாயின் அவன் இறந்தபிறகே மூவருமோ மூவரிற் சிலரோ பிறந்து வளர்ந்திருக்கலாம். ஆதனுக்குப் பின் அவன் தம்பி குட்டுவன் ஆண்டு அவனும் இறந்தபிறகே அவ்விருவரின் மருமக்கள் பட்டமெய்தற் குரியராகையால், பல்யானைச் செல்கெழுகுட்டுவன் ஆட்சிக் காலத்தே பிறந்து சிறந்து இம்மருகர் அவனிறந்தபிறகு தம் அம்மான்மார் அரசுரிமையைத் தம்முள் வயதுமுறையில் ஒருவர்பின் ஒருவராக எய்தியதில் எவ்வகை அசம்பவமும் அசங்கதங்களும் ஏற்படமாட்டா. ஆகவே பண்டிதரவர்கள் கூறும் கால அசம்பவ வாதம் மக்கட்டாயத்தை மட்டும் மறுப்பதாய் மருமக்கட்டாயமரபோடு அமையக் காண்பாம்.

ஈண்டு இத்துணை விதண்டைகளுக்கும் அடிப்படை ஆதி ஆதனுக்கு இம்மூவரையும் அவன் மனைவியீன்ற தனையரென ஏற்படுத்திக் கொண்ட கற்பனையேயாகும். இவர் அவனுக்கு மக்களா? மருகரா?

என்பதுவே வாதமாயிருக்க, மக்களெனத் துணிவுசெய்துகொண்டு,
மக்களாகையால் மருமக்களாகார் என்று வாதிப்பது முறையாமா? ஆத
னுக்கு இவர் மக்களெனச் சுட்டுங் குறிப்பொன்றும் யாண்டும் இல்லா
திருக்கவும், "நெடுஞ்சேரலாதற்குப் பதுமன்றேவி யீன்றமகன்" என்
பது போன்ற பதிகத்தொடர்களை இழுத்துவைத்து, அவற்றை வாட்டி
வருத்தித் தங்கோளொடு பொருத்தக்கருதி, "இவர் அவன் மக்களல்லாத
வரை, அவன் பெயரொடு புணர்த்துப் பதிகங்கள் கூறமாட்டா; கூறி
யிருப்பதால், அவனுக்கு இவர் மக்களேயாவ"ரெனப் பண்டிதரவர்கள்
வாதமிடுகின்றார்கள். மக்களெனக்கொண்டாலோ, பதிகங்கள் இவர்
தமக்குக் கூறும் ஆட்சிக்கால அசம்பவங்கள் பல விரைந்து தப்புமுறை
என இரைந்து மறுக்கின்றன. இவ்வளவு விபரீதம் விளைக்கும்
பொருந்தாப்பொருளை இத்தொடர்களின் தலையிற் சுமத்தக் காரணமாவ
தெல்லாம் ஆதனை இவருக்குத் தந்தையாக்கும் விருப்பமேயாம். அவ்
விருப்புக்கு ஆதாரமாக இத்தொடர்களை அமைத்துக்காட்டும் முயற்
சியை அத்தொடர்களே விசதமாக விளக்கும் வேறுபல குறிப்புக்கள்
விழல்நீராக்குகின்றன. இனி ஆதனுக்கும் அவன் தம்பி குட்டுவனுக்
கும் இவர் மருகராயின் இவரொடு ஆதன்பெயரைமட்டும் புணர்த்திக்
குட்டுவனைப் பதிகத்தொடர்கள் கூறாமல்விடுப்பானேன்? என்பாரேற்
கூறுவாம். ஒருகுடியிற் றலைநின்ற முதல்வனையே குறித்து அவன்
மரபினரிவரென அவன்பின்னோரைப் பாராட்டுவது இயல்பும் பொருந்
தியமரபுமாகும். பத்து அம்மான்மாருளரேல் அப்பதின்மரையும்
அடுக்கிக்கூறி அவரனைவருக்கும் மருகனவன் இவன் எனக் குறிப்பது
முறையில்லை; அழகுமில்லை. நெடுஞ்சேரலாதன் தலைமையும் சிறப்பும்
ஒருங்கமைந்தவனாகவே அவன் மரபுவிளங்க இன்னார் ஈன்றுதந்த மகன்
இவன் என மருகரைப்புகழ்வதே புலவர்மரபும் பொருந்துமுறையுமாகும்.

இனி, பண்டிதரவர்கள், "நுந்தைதாணிழலிருந்தோய்" என்று
இளங்கோவைத் தேவந்தி — தெய்வமேறியவள் — முன் நிமித்திகன்
கூற்றாகக் கூறிய சிலப்பதிகார அடியை ஆதரவாக்கி, அதிற்குறித்த
நுந்தை என்ற சொல் இமயவரம்பனையே குறிப்பதாக முடிவுசெய்து
கொண்டு, அதன்மேல் இஷ்டப்படி பல அசங்கதவாதங்களைக் கட்டுகிறார்
கள். மூலத்தில் இங்கு இமயவரம்பனையே நுந்தைச்சொல் குறிப்ப
தெனக்கொள்ளற்கு எவ்வித அவசியமும் ஆதரவுமில்லை. நிமித்திகன்

இளங்கோவைக் குறித்து "நின்னை அரசுவீற்றிருக்கும் திருப்பொறி யுண்டென்று" கூறினது 'வஞ்சிமூதூர் மணிமண்டபத்தில்' என்பது மட்டும் அடிகள்வாக்கால் விசதமாவதுதவிர, இமயவரம்பன் அவைக்களத் தில் என்றுகொள்ளுதற்கு யாதொரு நியாமும் அவசியமும் குறிக்கப்பட வில்லை. செல்கெழுகுட்டுவனையோ அல்லது இளங்கோவின் தந்தை யான சோழனையோ இந்த நுந்தைச்சொல் குறிக்கலாம் இவ்வடியினுற் செங்குட்டுவன் பொறுமையாற் புழுங்கும் மனப்பான்மையுடையவன் என்பதும், அடிகள் துறக்கும் மனத்தூய்மையுடையவர்என்பதும் மட்டு மே தெளியப்படுவதல்லால், மற்றப்படி வயது தாயமுறைகள் ஒன்றை யும் இதுகொண்டு ஒரு முடிவுசெய்ய அடிகளின் இவ்வடி இடம் தா வில்லை. வேறுசான்றுகளால் இமயவரம்பனுக்கு இவர்கள் மக்களென்பதை நிறுவிக்கொண்டால், அதன்பிறகு இவ்வித விவகாரத்திற்கு ஒருவாறு இடம் தேடல் கூடும். அவ்விதமான தெளிசான்றுகண்டால், வாதத் துக்கே வழியிராது. அத்தகைய சான்று இல்லாவிடத்தும் இவ்வாதம் நிலையாது. 'நுந்தை' யென இமயவரம்பனை மூலத்திற் றெரிக்காததோடு அரும்பதவுரைகாரரும் தெருட்டினாரில்லை. இவ்வுரைகாரர் "நுந்தை யாகிய சேரலன்" என்பது மட்டுமே கூறிவிட்டாரன்றிச் சேரலாதன் என்று கூறவில்லை. சேரலன் என்பது எந்தச் சேரனையும் குறிப்பதொரு பொதுப்பெயரேயாம். ஆகவே, இப்பழையவுரைக்குறிப்பும் ஈண்டு நுந் தைச்சொல் நெடுஞ்சேரலாதனைச் சுட்டுமென்ற பண்டிதரவர்களின் வாதத்தை ஆதரிக்கவில்லை.

அன்றியும், சேரரை மக்கட்டாயிகளாகக்கொள்ளினும், "அரசு வீற்றிருக்குந் திருப்பொறி" இளவலுக்குண்டென்ற நிமித்திகன்கூற்று செங்குட்டுவனைமட்டும் கோதிப்பிப்பானேன்? "இவர்கள் மருகர்தாயமா யினாயின், இளவலும் நாளடைவில் ஒருகாலம் அரசெய்துமுரிமை யுடையவனாவன்; அதனால் அப்பொறி உண்டென அவனுக்கு நிமித்திகன் கூறுவதி லவன்தமயனை செங்குட்டுவன் மனமுனைபமாட்டான்; அவன் கோபத்தை மாற்றுவதற்கு இளங்கோ துறவுபூணவும் வேண்டா; இவ் விரண்டும் நிகழ்ந்ததனால் இவர்கள் மக்கள்வழியினரே யாவர்," என்று பண்டிதரவர்கள் தெளிவுகாட்ட முயலுகிறார்கள். இவர்களை மக்கள் வழித்தாயிகளெனக் கொள்ளினுங்கூடச் செங்குட்டுவனுக்கு முன் பிறந்து பிறப்பாற் சிறப்புரிமைகொண்ட நார்முடிச்சேரல் இருக்கின்றான்,

அவனுக்கில்லாதகோபம், அவனும் அவன்சந்ததியாரும் இல்லாதுபோனு லொழியச் சேரர்முடிக்கு உரிமைபெறவொண்ணுத செங்குட்டுவனுக்கு ஏற்பட எவ்வித நியாயமும் இல்லையாகிறது. இவ்வாறு தம்கொள்கைக்கு இடையூருக நிற்கும் நார்முடியைப் பண்டிதாவர்கள் தக்கபடி தண்டிக்க முனைகிருர்கள். தம் கதாநாயகனுன செங்குட்டுவன் தன்ஆட்சிக்குப் பங்கம் அநுமானிக்கும்வண்ணம் நிமித்திகன் சொன்னதற்குத் தன் தம்பியை வெருண்டு அவனை இல்வாழ்க்கையின் எல்லையிலும் நில்லாது விலகும்படி விரட்டிவிட்டான். அவன்சரிதஆசிரியர் அவனுட்சிக்குத் தடையாக அவனுக்கு முன்பிறந்ததவறுடைய நார்முடியை அவதிக ளொன்றுமின்றி என்றுமே வஞ்சியூரொடு நாட்டினின்றும் விலக்கி விரட்டிவிட விழைகின்ருர்கள். இதற்காக அவன் தாய்க்கு மணம்புணர்ந்த மனைவிப்பதவியை மறுத்து அவளைக் கேவலம் காமக் கிழத்திநிலைக்கு இழிக்கின்ருர்கள். வேளிர்குலப்பெண்ணெனினும் முடிமன்னருக்கு மனைவியும் தாயுமாதற்குரிமையுடையாளை அவ்வுரிமை யிழப்பித்து இழிதகவுபூணவைப்பதற்கு இவர்கண்ட நியாயமெல்லாம் செங்குட்டுவனுக்குச் சோழன்மகளொருத்தியைத் தாயாக்கிய தம் கற் பிதமொன்றேயாம். இவன் தாய் சோழனுக்குத் தனையையா? மனைவியா? என்பது வாதப்பொருள். அதைத் தெளிக்காமல் மகளெனத் துணிந்து கொண்டு, சோழன்மகள்மகனுக்கு மற்றெல்லாமனைவியர்மக்களும் வழி பட்டுத்தொழுது பின்நிற்கவேண்டுவதே மறைவகுத்த அறவிதியென்று முடிக்கிருர்கள். செங்குட்டுவன்தாய் சோழன்மகளே எனக் கொள்ளி னும், அவள்கணவனுன ஆதனின் மற்றெருமனைவிவயிற்றில் முன் பிறந்த தலைமகனுன நார்முடியைவிலக்கிப் பின்பிறந்த செங்குட்டுவ னுக்கு வஞ்சியரசுரிமை வருவானேன் ? அதற்காக வயதுமுறை கருதா மல் மனைவியரின் பதவிமுறைவரிசையாலே மக்களுக்குப் பட்டவுரிமை வருமென ஊகிக்கிருர்கள். இவ்வூகமும் நார்முடியை விலக்குமாறில்லை. இவ்வம்பை விலக்குதற்கு நார்முடியின்தாய் சோல'தன் பின்மணந்த மனைவியென்றும், செங்குட்டுவன்தாயே முன்மணந்த பட்டமஹிஷி என்றும் கொள்ளவேண்டிவருகிறது. இதற்கு யாதோராதாரமும் இல்லை. ஆகவே, மனைவியரின் மணவரிசைக்கிரமத்தாலும் மக்களின் உரிமை துணியப்படமாட்டா; அம்மக்களின் தாய்ப்பாட்டன்மார் தகுதிநிலை மைகளைக்கொண்டே சிறப்புரிமையெய்துமெனத் துணிவுகொண்டு, முடி

யுடையசோழன்மகள்மகனான செங்குட்டுவன் பின்பிறந்தானாயினும், தனக்குமுன்பிறந்த நார்முடி வேளிர்குலமகளின்மகனாகையால் அவனை விலக்கித் தன் தந்தையின் வஞ்சியரசைத் தான் எய்தியவனாவான், என ஊகிக்கிறார்கள். ஆகவே, குட்டுவன்தாய் சோழனுக்கு மகளென ஒரு ஊகம், பிறகு அவள் ஆதனுக்கு முதன் (மணந்த) மனைவி என்று ஒரு ஊகம், அவள் பின்மணக்கப்பட்டவளாயினும், தன் தந்தையின் பதவி பற்றிக் கணவனுக்கு அவளே பட்டமஹிஷியாயினள் என்றதொரு ஊகம், இன்னும் இவையனைத்தும்போதாமல் இறுதியாக, சேரலாதன் குடியிற்பிறந்த மக்களுள் அவர் வயதுமுறை, அம்மக்களையீன்ற தாயரின் மணவரிசைமுறைகளையெல்லாம் விலக்கித் தாய்ப்பாட்டன்மார்தகுதிபற்றியே அரசுரிமையெய்தும் ஒரு வழக்கம் உண்டெனும் ஊகம்—ஆக இத்தனை ஊகங்களையும் பண்டிதரவர்கள் வாதத்திற்குப் படைதிரட்டி அணிவகுக்கிறார்கள். அடியற்ற இனைய பல ஊகங்களையும் துணைகொண்டு சேரருக்கு மக்கட்டாயமுறைதர முயலுகிறார்கள். இதன் பலாபலத்தைப் படிப்பவரே சிந்திக்கட்டும்.

இனிப் பிற்கால உரைகாரர் சொன்ன இலக்கியக்குறிப்புக்களை ஆதாரமாக்கி மிகப்பழைய முற்காலச் சரிதநிகழ்ச்சிகளை ஒருதலையாகத் துணிதல்கூடாதென்று பண்டிதரவர்களே வேறிடங்களில் வற்புறுத்தியிருக்கிறார்கள். அடியார்க்குநல்லாரைத் தம் மக்கட்டாயக்கக்ஷிக்கு ஆதாவாக்கித் தம் வாதத்தை முடிவுகட்டவரும் பண்டிதரவர்கள், அவ் வடியார்க்குநல்லாரே ஐயமறக் கொடுங்கோளூரே வஞ்சிமூதூர் என்றுகூறியதைத் தக்க காரணமின்றியும் நிராகரித்துவிடுகிறார்கள். அடியார்க்குநல்லார்மட்டுமில்லை. தம் மதத்திற் குதவாதபோது, பல நூற்றாண்டுகளுக்குமுந்திய சேக்கிழாரையும், தற்கால மஹாமஹோபாத்தியாயரவர்களையும் அலக்ஷியமாய் எடுத்தெறிந்து விடுகிறார்கள். ஆனால் எவ்விடத்திலாவது தமக்கு உதவக்கூடுமென்று நினைக்கும்போதெல்லாம் எந்த அநாமதேயிகளின் எவ்விதவாக்கையும் போதாரமாகப் பேசுகிறார்கள். உண்மையாராய்ச்சிக்குப் பொருத்தமற்ற பாட்டு உரைக்குப்பைகளைப் பெருக்குவதால் உபகாரமில்லை. ஐயமறத்தெளிவிக்கும் போக்குடைய வாக்குகள்—அவையும் தகவுடைய பழம்புலவர் கூறியனவே—பழமையாராய்ச்சிக்கு உதவுவனவாம். எனவே, ஈண்டுச் சிலப்பதிகார வரந்தரு

காதையடிகளில் வரும் "நந்தை"ச்சொல் இமயவரம்பனைக் குறிப்பதாக ஐயமறத்தெளியாதவரை இவ்வடியைவைத்து எவ்வித வாதமும் நம தாராய்ச்சிக்குப் பயன்படுமாறெழுதற்கில்லை. எனவே, வயதுபற்றிப் பண்டிதரவர்கள்காட்டும் அசங்கதங்களனைத்தும் ஒருவாறு அகன்று விடுகின்றன.

மேலும், நார்முடி வேறுதாய்மகன்; செங்குட்டுவன் மற்றொருத்தி மகன். ஆகவே, அவர்களுக்குள் வயதணிமை அவசியமில்லை. நார் முடிக்குப் பல ஆண்டுகளுக்குப் பின்னவனும் ஆடுகோட்பாட்டுச் சேர லாதனுக்குச் சிறிதளவே முன்னவனுமச் செங்குட்டுவன் இருந்திருக்க லாம். தான் போதிய இளம்பருவத்தே நார்முடிக்குப்பின் பட்டமெய்தி ஆண்டிருக்கலாம். அவனுக்குப்பின் ஆதனும் முப்பத்தெட்டாண்டு அரசுவீற்றிருந்திருக்கலாம். இதில் எவ்வித அசம்பாவிதங்களும் ஏற்படவேண்டா. இன்னும் ஆடுகோட்பாட்டு ஆதன் வீரச்செயலனைத் தும் அவன் பட்டமெய்தியபின்னரே அவன் ஆற்றியிருக்கவேண்டு மென்ற நியதியில்லை. இளவரசனுயிருந்து பெற்ற வெற்றிகளையும் சுட்டி அவன் அரசனானபின் அவனைப் பாடும் புலவர் பாராட்டிப் பாடுதல் தகவுடைத்தாம். அப்படிக் கூறுவதால் ஏற்படும் அசங்கதங்கள் ஒன்று மில்லை.

இதுவரை நாம் காட்டிவந்தவெல்லாம் பண்டிதரவர்கள் கூறும் வாதங்கள் அவர்கள் துணியும் முடிவுகளைத் தரமாட்டா என்பதுவும், எவ்வகையிலும் மக்கட்டாயக்கொள்கையை ஒருதலையாக நிறுவுதற்கு அவை உதவமாட்டா என்பதுவுமேயாகும். உண்மையிற் பதிற்றுப் பத்துச்சேரர் பதின்மரும் வஞ்சியாண்டவராயினுமாகுக. அன்றிப் பல் வேறு நாடாண்டவர்களாயினு மாகுக. அவர்களிருந்து ஆண்ட ஊர் களினல் நமதாராய்ச்சிப்பொருளை ஒரு முடிவுபண்ணுமாறில்லை. இவ் வாராய்ச்சியின் ஒரேநோக்கம் சேரரின் தாய வழக்கைப்பற்றியது. அவ் வழக்கைச் சந்தேக விபரீதமறத் தெளிவிக்கக்கூடியனமட்டுமே இவ் வாதத்திற்கு உபயோகமாகும். அல்லன வேண்டப்படா. எனவே இப் பதிகச்சேரர் பதின்மரும் மாந்தையில் ஆளிலென்? தொண்டியில் ஆளி லென்? வஞ்சியில் ஆளிலென்? அவர்கள் மக்கள்வழியாண்டவரா? அன்றி, மருகர்வழிமயில் வான்முறையாய் ஆண்டுவந்தவரா? என்

பதுவே நமக்குப் பொருள். பதிற்றுப்பத்து முதலிய பண்டையிலக்கியச் சான்றுகளால் இவ்வாராய்ச்சி நிலைபெறல்வேண்டும். ஆதலால் அச்சான்றுகளையும் அவற்றின் ஐயமறத்தெளிந்த குறிப்புக்களையும் நடுநிலையில் ஆய்வதுவே இவ்வாராய்ச்சி மேற்கொள்பவரின் கடமையாகும்.

இனி இம்முறையில் நோக்கப் பண்டிதரவர்கள் மக்கட்டாயமரபும் இத்தகைய வயதுவாத அசங்கதங்களை அறவே அகற்றுமாறில்லை என்பது ஆழச்சிந்திப்பார்க்குத் தெளிவாகும். பண்டிதரவர்கள் கூறுகிறபடி இமயவரம்பனிருக்கும்போதே செங்குட்டுவனுக்கு வயது இருபது நிறைந்திருக்கவேண்டும். அவன் மாற்றாந்தாய்வயிற்றுத் தமயனான நார்முடிக்கு இருபத்தைந்தும் ஆடுகோட்பாட்டுச் சேரலுக்குப் பதினைந்துமாவது ஆயிருக்கவேண்டும். இவர்கள் ஒருதந்தைமக்களாய் ஞாதிமுறையில் தம் தந்தையின் சேரநாட்டை ஒருவர்பின் ஒருவராய் ஆட்சிபுரிவதானால், செல்கெழுகுட்டுவன் ஆண்டது வருஷம் 25. பிறகு நார்முடி ஆண்டது 25. அதன்பின் செங்குட்டுவன் ஆண்டது 55. ஆக 105 ஆண்டு ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் காத்திருந்ததோடு, இமயவரம்பன் இறக்கும்போது குறைந்தது அவனுக்கு 15 ஆண்டாவது நிரம்பிவிட்டதால் அதனையும் கூட்ட அவன் பட்டமெய்துங்கால் அவனுக்கு வயது நூற்றிருபது ஆகிவிடும். அவ் வசம்பாவிதத்தை அறிந்து அதனை விலக்குவதற்காகவே, பண்டிதரவர்கள் இவனுக்கும் இவன் ஸஹோதரன் நார்முடிக்கும் வஞ்சியரசை மறுத்து, மாந்தையில் முடிசூட்டிவைக்கிறார்கள். அதற்கு ஆதாரம் எதுவுமில்லை. இனி, மாந்தையாட்சியே தந்தாலும் இவ்வயதுவாதத்திற் பண்டிதரவர்களின் மக்கட்டாயம் மருமக்கட்டாயத்தைவிட நிரம்பிய இளம்பருவ ஆட்சியை அவனுக்குத் தருவதாயும் காணப்படவில்லை. இவன் இமயவரம்பன் மூன்றுமகனைப், வஞ்சி யிழந்து தன் சிறியதந்தை குட்டுவனும் தமயன் நார்முடியும் ஆண்ட மாந்தையில் அவ்விருவருக்கும் பின் பட்டமெய்தியவனாகப் பண்டிதரவர்கள் கருத்துப்படி கொண்டாலும்கூட, இவன் தந்தையிருக்கும்போதே இவனுக்கு வயது குறைந்தது 15. சிறிய தந்தை ஆட்சிக்காலம் 25, பிறகு தமயன் ஆண்ட ஆண்டு 25, ஆக இவன் மாந்தைச் சிங்காதனத்துக்குக் காத்திருந்தது 50 ஆண்டு. ஆக இவனுக்கு முடிசூட்டும்போது வயது 65 ஆவது ஆயிருக்கவேண்டும். அதற்குமேல் 38 ஆண்டுகள் (அதாவது 103 வயது வரை) இவன்

நாடாண்டிருக்கவேண்டும். அன்றியும் இவன் இப்படித் தொண்டுகிழப் பருவத்திற் பட்டமெய்தியும், பிறகு 38 ஆண்டுகள் பல கடும்போர்களைப் புரிந்து விருதுகளைப் பெருக்கிய வீரனாக ஆட்சிபுரிந்திருக்கவேண்டும். இதிலெல்லாம் ஏற்படாத அசங்கதங்களனைத்தும் இவனை மருமக்கட்டாயக்குடியினனாக்கினவுடன் விரைந்தெழுகின்றன. மக்கட்டாயியானால் 65 முதல் 103 வது வயதுவரை குறையாது வளரும் இளமை கொள்ளுகிற இவனை மருமக்கட்டாயம் அதே வயதில் உயிர்தாங்கியிருக்கவும் முடியாத யாப்புறவற்ற மூப்புடையனாக்கிவிடுகிறது.

இவையெல்லாம் எதுகொண்டும் மாற்றுரை மலையவிரும்பும் பண்டிதவாதவிந்தையேயாகும். ஆகவே கேவலம் வயதைவைத்துத் தாயமுறையை வரையறவுசெய்ய எழுப்பும் வாதங்களின்பயன் இதுவேயாகும்.

இன்னும் இமயவரம்பனுக்குச் செங்குட்டுவன்முதலாயினோர் மக்களாகாவிட்டால் அவனை இழுத்துவைத்து அவனுக்குமகன் என்று பதிகங்கள் கூறுவானேன்? அப்படிக் கூறுவதாலேயே இமயவரம்பனுக்கு இவர்கள் மக்களே என்பது போதருகின்றது என்று வாதிக்கிறார்கள்.

முதலில் இம்மூவரும் இமயவரம்பனுக்குமக்களென்று பதிகங்கள் கூறவில்லையென்பதையும், இவர்கள் இமயவரம்பனுக்கு மருகர்முறை வழித்தோன்றல்களாய், அவன் கோக்குடிப்பெண்டிரிடம் முறையே அப்பெண்டிரின் கணவரான வேள்பதுமன், சோழன்மணக்கிள்ளிஎன்பவர்க்குப்பிறந்த மக்களாவர் என்றே பதிற்றுப்பத்துப்பதிகங்களால் தெளிவாகிறதென்பதையும் பாரதியவர்கள் தம் கட்டுரையி லினிதுவிளக்கியுள்ளார்கள். பதிகவாக்குக்களின்போக்கும் இதனையே வலியுறுத்துகிறது. இனி 'இம்மூவரை அடுத்துநின்ற செல்கெழுகுட்டுவனோடு இவர்களைச் சேர்த்துச் சொல்லாமற் பதிகங்கள் அவனுக்கு முன்னிறந்த இமயவரம்பனை இழுத்துவைத்து அவனோடுசேர்த் திவர்களைக் கூறுவானேன்? அப்படிக்கூறுவதால் இவர்கள் அவன்மக்களெனத் தெளியவேண்டும்' என்கிறார்கள். அதனால் அவ்வித முடிவுகொண்டுதீரவெண்டியதில்லை.

இராமனைத் தாசாதி என்று மட்டும் கூறியமையாமல், இராகவன் மானவன் என்றும், இக்ஷ்வாகுமகன் சிபிமகன் என்றும் நூல்கள் கூறு

வானேன்? ஒருகுலத்திற் சிறப்புடைப் பெரியோரைச் சுட்டி அக்குலத்தவர்க்கெல்லாம் பெருமைகூறுவது கவிமாபன்றோ? இமயவரம்பன் பெரும்புகழால் சிரேஷ்டனுவதோடு அவன்குடியில் அவன்தலைமுறைச் சேரருள் ஜேஷ்டனுமாவதால், அவனைக்கூறி அவனுக்கு வழித்தோன்றல் என்று அவன் பின்னவரைப் பேசும் கவிகளின்கருத்து, 'இராகவன்' 'மானவன்' என்று அவன்குலமுன்னவருட் சிறந்தவரோடு இராமனைச் சேர்த்துப் பேசிச் சிறப்பிக்கும் முறையிற் குலப்பெருமைகூறின கவிமாபாவதன்றி, யாருக்குமகனுய் யார் எம்முறையில் ஆட்சியெய்தினர் என்ற சரிதம் கூறுவதன்று. அதுவன்றியும் ஒவ்வொரு பாட்டுடைச்சேரருக்கும் அவரவர் தந்தையரைச்சுட்டுவதே பதிகக்கருத்தாயின், செல்கெழுகுட்டுவனுக்கு அவன் தந்தைபெயரைக் குறியாமல் மூன்றும்பத்தின்பதிகம் அவனை 'இமயவரம்பன் தம்பி' என்று மட்டும் கூறியமைவானேன்? ஒவ்வொரு தலைமுறையிலும் தலைபாய சேட்டனைக் கூறி அவன் பின்னவரான அநுஜரையும் சேஷகாரரென்ற மருமக்களையும் குறிப்பதே இப்பதிகங்களின் நோக்கமென்பது அப்பதிகங்களின் போக்கால் விசதமாகிறது. இதுவே இன்றுவரை நின்றுவரும் மருமக்கட்டாயக் குடும்ப சம்பிரதாயமுமாகும்.

அன்றியும், ஒருகவி ஒன்றைக் கூறுவதாலாவது கூறுமல்விடுவதாலாவது அதனோடு இன்றியமையாப் பொருத்தமற்ற வேறொன்றை உண்டு இல்லை என்று ஊகித்தல் உண்மையாராய்ச்சிமுறையாகாது. விசாரணைவிஷயத்தை ஆண்டுக் கவி கூறவந்தாரா? கூறுமல் அமைவது கூடாத காரியமா? என்ற பலவற்றையும் குறித்துநோக்கி ஆராயவேண்டும். கூறிய ஒன்றைக் கொள்ளலாமேதவிர, அதைமட்டும்வைத்துக் கவிகூறுத யாதொன்றையும் எவ்விதத்திலும் துணிவது சாத்தியமில்லை; முறையுமில்லை.

மேலும், "காலமுறையில் வைத்தே பதிற்றுப்பத்துத் தொகுக்கப்பட்டிருத்தலை அதனுட்கண்ட பதிகங்களாலும் வாக்கியங்களாலும் உய்த்துணராதும்," என்றும், "நார்முடிச்சேரலைப்பற்றிய பகுதியை நான்காவதாகவும், அவன்தம்பி ஆடுகோட்பாட்டுச்சேரலாதனது பகுதியை ஆறுவதாகவும் வைத்து இடையிற் செங்குட்டுவனைப்பற்றியதை அமைத்திருக்கின்றூர்; இதனுல் நார்முடிச்சேரல் செங்குட்டுவனுக்கு

(காலத்தால்) முற்பட்டவனாகவும், அவன் தம்பி சிறிது பிற்பட்டவனாகவும் கருத இடமுண்டாகிறது" என்றும் பண்டிதரவர்களே கூறுகிறார்கள்.* வஞ்சியாட்சி இம்மூவருக்கும் இல்லையாயின், இவருள் செங்குட்டுவன் ஒருவனே வஞ்சிச்சேரனும், மற்றையவிருவரும் தொண்டியாண்ட கிளைச்சேரருமாவரேல், இவரைத் தனித்தனியே வகுத்துவையாமல் தொண்டிக்குறுமன்னர்சோதரர் இருவருக்கிடையே வஞ்சிப்பெருவேந்தனைப் புகுத்துவானேன்? நாடாட்சி, வரன்முறை வரிசைகளாற் கோச்சேரரை வகுத்துவைப்பதிற் பண்பும் பொருளும் உண்டு. ஆண்டநாடு, ஆட்சிமுறை, தலைநகரம், குலத்தலைமை, குடியொருமைகளால் தொடர்பற்ற எதிலர் பலரை இடைச்செறித்து வரிசைப்படுத்துவதேன்? வயதால் மட்டும் மூப்புடைய சிறுகிளைக் குறுமன்னரைப் பதவி, உரிமை, தலைமை, பெருமைகளால் தலைசிறந்த கோவேந்தனுக்கு முன்வைத்துக் கோச்சேரன் செங்குட்டுவனைப் பின்வைத்தெண்ண ஆன்றபுலவர் துணிவரா? வஞ்சியாண்ட இமயவரம்பனுக்கு அடுத்து அவன்மகனாய்த் தலைநகரொடு சேரநாடாண்ட செங்குட்டுவனைவைத்து எண்ணி, பிறகு சேரர்கிளைக் குறுமன்னரான செல்கெழுகுட்டுவன், நார்முடி, ஆடுகோட்பாட்டுச்சேரலர்களை ஒருங்குசேர்த்து மாந்தைக்கிளை தொகுக்கலாமே? இமயவரம்பன், செல்கெழுகுட்டுவன் இவர்களொடு சமகாலத்தவராய்த் தொண்டியிலிருந்தாண்டவராகப் பண்டிதரவர்கள் கொள்ளும் இளம்பொறைக் கிளைமன்னரை வேறு தொகுத்துப் பின்வைத்தபுலவர், மாந்தைக்கிளைச்சிற்றரசரை வஞ்சித்தலைபரசருக்கு முன் புகுத்திவைத்துத் தலைமைமுறை வழுவி, அவரை "வரிசையால் நோக்காமல், பொதுநோக்கி" முறைபிறழவைத்துப் பிழைபிழைப்பரா?

இன்னும், வயதால் தலைமகனான நார்முடியை விலக்கி இளையனான செங்குட்டுவனுக்கு வஞ்சியரசுவக்தெய்துவானேன்? நார்முடியின் தாய் காமக்கிழத்தி என்றும் செங்குட்டுவனை ஈன்றவளே பட்டமஹிஷி என்னும் பண்டிதரவர்கள் சமாதானம் அமைப்பதற்கு ஏதேனும் ஆதாரம் உண்டா? இமயவரம்பன் இருமனைவியருள் முதலில் யாரைமணந்தான் என்பதை எதனாற் கண்டுவைத்தார்கள்? பதுமன்றேவி, மணக்கிள்ளி தேவிகளைப் பதுமன் மணக்கிள்ளிகளுக்கு மகளிராக்கிச் சோழனுக்கு

*சேரன்செங்குட்டுவன் பக்கம்—14.

மணம்புணர்த்தியதோடு நிற்காமல், தம் கொள்கையை உறுதிசெய்வதற்காக அவர்களுள் மூத்தவனைப் பெற்றவளைக் காமக்கிழத்தியாக்கி, இளையவன்தாயைப் பட்டமஹிஷியாக அபிஷேகஞ்செய்கிறார்கள். பண்டிதரவர்களை தம் கட்டுரையில் (செந்தமிழ்த் தொகுதி–27. பக். 376) காமக்கிழத்தியர் குலத்தாழ்வுடையரென்றும், பேரரசர்க்கு மகட்கொடைக்குரிய உயர்குலத்து வேளிர்செல்வியர் பட்டமஹிஷியாவர் என்றும் விளக்கி, செங்குட்டுவனின் மங்கலவதுவைக் கோப்பெருந்தேவி இளங்கோவேளிர்குலத்தவளென்றும் கூறி உதாரணவாயிலாகவும் வற்புறுத்தியிருக்கிறார்கள். பதுமன்தேவி என்பாளும் வேள்-ஆவிக்கோமான் பதுமன்செல்விஎன்றே பண்டிதரவர்கள்கொள்ளுவதால், அவள் இழிகுலத்தாரெய்தும் காமக்கிழத்திப்பதவியை அடைந்தவளாகமாட்டாள். மங்கலமடந்தையாகவே இருக்கவேண்டும். கோச்சேரன் மங்கலதேவியான அவள்வயிற்றிற்பிறந்த முதல்மகனை முடிபுனையாது விலக்க வழியில்லை. இன்னும் வஞ்சியாட்சி வரிசைமுறையில் இமயவரம்பனையும் செங்குட்டுவனையும் அவன்மகன் குட்டுவன்சேரலையும் ஒருங்கே வரிசைமுறை வைத்தெண்ணாமல், பதிற்றுப்பத்திற் செங்குட்டுவனுக்கு முன்னும் பின்னும் வஞ்சியரசுரிமையற்ற நார்முடியையும் அவன் தம்பி ஆதனையும் புகுத்திவைப்பானேன்? இவைகளையெல்லாம் நிதானமாக ஊன்றிச் சிந்தித்தால், பதிகச்சேரர் பதின்மரும் வஞ்சியாண்ட கோச்சேரர்குடியில் வான்முறைவந்த வரிசைப்பெருமன்னரேயாவர் என்பது தெளியக்கிடக்கின்றது. வேறு எவ்வாறுகொள்ளினும் அது அசங்கதங்களுக்கிருப்பிடமாய் அமைவதை நாம் காணுகின்றோம்.

## III. முற்றும்மையாற்பெற்ற உண்மை.

இனி, "ஆராத்திருவிற் சோழர்குடிக்குரியோர், ஒன்பதின்மர்வீழ வாயிற்புறத்திறுத்து" என்ற ஐந்தாம் பதிகத்தொடரோடு, இளங்கோவடிகள் நீர்ப்படைக்காதையுட் கூறிய "நின் மைத்துனவளவன்......... ஒன்பது குடையும் ஒருபகலழித்து, அவன் பொன்படுதிகிரி ஒருவழிப் படுத்தோய்!" என்ற அடிகளைத் தொகுத்து, இவ்வடிகளாற் செங்குட்டுவன் சோழனுக்கு மகள்பிள்ளை (தௌஹித்திரன்) என்று வாதிக்கின்றார்கள். இவ்வடிகளின் சொற்றொடர், இவர்களின் இம்முடிவைவிளக்காததோடு இதற்கு மாறானமுடிவை வலியுறுத்துவதாகவும் அமைந்து

நிற்கின்றது. கிள்ளிவளவனைச் செங்குட்டுவனுக்கு "நின் மைத்துனச் சோழன்" என்று அடிகள் குறிப்பதால், செங்குட்டுவன் கிள்ளிக்கு முந்தியசோழனுக்கு மகனில்லை, மருகனாதல்வேண்டும், என்று துணிய விரைகிறார்கள். ஆனால், பண்டிதரவர்களோ இத்தொடரில் அடிகள் "ஒன்பதுகுடையும்" என்று உம்மைகொடுத்திருப்பதைச் சுட்டி, "முற்றும்மையால், சோழர்கிளை ஒன்பதுபிரிவுபெற்று ஒன்பதின்மர் சோழரால் ஆளப்பட்டுவந்தது என்பதும், இவ்வொன்பதின்மரின் வேறாய் அந்நாட்டின் தலையரசுக்குரியனாயிருந்த கோமகனே செங்குட்டுவனால் உதவிபுரியப்பெற்றவன் என்பதும் பெறப்படும்" என்றெழுதுகிறார்கள். ஈண்டு முற்றும்மையால் இம்முடிவுகள் ஏற்படமாட்டா. இதிற் பண்டிதரவர்கள்வாதத்துக்கு அடிப்படையாவது,

"இனைத்தென வறிந்த சினைமுதற் கிளவிக்கு
வினைப்படு தொகுதியி னும்மை வேண்டும்"

என்ற தொல்காப்பியச் சொல்லதிகாரக் கிளவியாக்கச்சூத்திரமேயாகும். இச்சூத்திரவிதியைப்புணர்த்தி, நீர்ப்படைக்காதையில் அடிகள் கூறும் தொடருக்குப் பண்டிதரவர்கள்கொண்டபடி அமைத்து ஆராயப்புகின், "சோழர்குடிக்குரியார் ஒன்பதின்மரே" என்பதொன்றே பெறப்படுமல்லால், கிள்ளிவளவனுள்ளிட்டுப் பதின்மர் சோழர்குடிக்குரியர் என்று கொள்ளுதற்கு இவ்விதி இடங்கொடாதென்பது மலையிலக்கு.

எனவே, செங்குட்டுவனுதவிபெற்றுச் சோழர்குடிக்குரிய ஒன்பதின்மரையும் அழித்து அரசுபெற்ற வளவன் அச்சோழர்குடிக்கு மற்றைய ஒன்பதின்மரைப்போல ஞாதித்தாயவுரிமைபற்றவன் என்பது தெளியப்படும். இதனால் விளங்குவதாவது:—"செங்குட்டுவன் சோழனுக்குச் சேரர்குலப்பெண்ணொருத்தியாற் பிறந்த மகனாகையால், அச்சேரநாட்டுத் தாயமுறைப்படி அந்நாட்டுரிமையைத் தான் எய்தி ஆண்டுவந்தான். அவன் தந்தைச்சோழன் இறந்தபோது அச்சோழகுல அரசுக்குரியராய்நின்ற ஞாதி இளங்கோவேந்தர் ஒன்பதின்மர் இருக்கவும், இறந்தசோழனுக்கு ஞாதித்தாயத்தானல்லாத சம்பந்தவழி மருகனொருவனை அவன் மைத்துனனான செங்குட்டுவன் அரசுபெறுவித்தான். அது பொறாத ஞாதிச்சோழர் ஒன்பதின்மரும் ஒருங்குவந்து அவனை மலைந்தனர். வலியுடைய செங்குட்டுவன் தான் முன்

முடிசூட்டிவைத்த தன் மைத்துனச்சோழனுக்காகவந்து அவ்வொன்பது தாயச்சோழவேந்தரொடும் பொருது அவரை யழித்துச் சோணாட்டைத் தன் மைத்துனவளவன் ஒருமொழிவைத்தாளச்செய்தான்" என்பதே யாகும். மைத்துனனான கிள்ளிவளவன் பட்டம்பெறுமுன்னரே ஒன்பது சோழமன்னரும் அவனைத் தடுக்க, அத்தடையைச் செங்குட்டுவன் களைந்தே பிறகு அவனுக்குச் சோணாட்டாட்சி தந்தான் என்பதை அடிகளின்தொடர் குறிக்கவில்லை. அதற்கு மாறாக, 'வளங்கெழு நன்னாட்டு மன்னவன் வளவன் கிள்ளியொடு (தாயமுறையிற்) பொருந்தா (ஞாதியர்முறையில் தம்முள்) ஒத்தபண்பினரான ஒன்பதுமன்னரும் அவன் (ஞாதியல்லாத அக்கிள்ளியின்) ஏவல்கேளார், அவன் (சோழ) வளநாடழிக்கும் மாண்பினராதலின் அவ்வொன்பது இளங்கோ (ஞாதிச் சோழ) வேந்தரையும் ஒருபகலில் அழித்து, மைத்துனக்கிள்ளியின் பொன்படுதிகிரி (ஆக்ஞாசக்கரம்) ஒருவழிப்படுத்தியுதவினான்' என்று அடிகள்வாக்குச் செவ்வனே தெளிவிக்கின்றது.

மேலும், கிள்ளியும் முன் சோழர் தலையாச குலத்தலைவனுக்குத் தாயமகனாகில், அவனை எதிர்த்து ஞாதிக்கிளைக் குடிச்சோழரனைவரும் ஒன்றுதிரண்டு அவனோடு மலையக் காரணமில்லை. பொறாமைகாரணமாகப் பொருதனராகில், ஒன்றிரண்டுதாயத்தார் அப்படிப் பொறாமைப் புழுக்கத்தாற் பொருவது இயல்பாகலாமே தவிர, சோழர்குடிக்குரியவராய் அக்காலத்திருந்த ஞாதித்தாயத்தாரனைவருமான ஒன்பது சோழரும் ஒருங்கு சேர்ந்து மயின்முறையாய் மகன்வழியில்நின்ற கிள்ளியை எதிர்த்துமலையப் போதிய நியாயமெதுவும் இல்லை. தாயத்தார் தாமிருக்க, ஞாதிமுறை வாராத சம்பந்தவழிக் கிள்ளி வலியனான தன் மைத்துனன் செங்குட்டுவனின் துணைகொண்டு சோணாட்டை ஆளப்பெற்றதனாலேதான், அத்தாயத்தாரனைவரும் அவனை எதிர்க்கநேர்ந்தது. எட்டிய ஞாதியரை விலக்கி, கோச்சோழனுக்கு ஒட்டிய மகள்மகனான தன் மைத்துனன் கிள்ளியைச் செங்குட்டுவன் நாடாட்சி பெறுவித்தமையால் அத்தாயத்தார் ஒன்பதின்மரும் ஒருங்குகூடி அதை மறுத்தடர்க்க முயன்றனர். அதுகண்டு வெகுண்ட செங்குட்டுவன் அவரனைவரையும் தன்வலியாற் பொருதழித்துத் தன் மைத்துனனுக்குச் சோணாட்டு ஏகாதிபத்தியத்தில் எவ்விதத் தடையும் இடையூறும் இல்லாமற் செய்து வைத்தான் என்று கொள்ளுவதே பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது.

இதைவிட்டு, செங்குட்டுவனுக்கு மைத்துனவளவன் என்று அடிகள் விதந்து கூறிய கிள்ளியை அவனுக்குத் தம்பி அல்லது தமயனுக்கித் தந்தைவழியில் அவனை ஞாதியரசனேயாகவேண்டுமென்று துணிவு செய்துகொண்டு, அத்துணிவினுதவியால் மருமக்கட்டாய உண்மையை மறுத்துவிட்டதாகப் பறையடிப்பதற்கு நியாயமென்னவோ தெரியவில்லை. பண்டிதரவர்கள்கொள்ளும் துணிவுகளெல்லாம், அவர்கள் கொள்கையொன்றாலேயே "யாதோர் ஐயமும் நிகழ இடமற்றதாகவும்" உடனே அனைவரும் அவற்றைக் கொள்ளத் தடையில்லாதனவுமாகி விடுகின்றன. தம் துணிவுக்குப் போதிய ஏது, சான்றுகளைக் காட்டி அவை கொண்டு அத்துணிவை நிலைபெறச்செய்துகொண்டபிறகே அத்துணிவைத் தம் ஆராய்ச்சியில் உபயோகிக்கவேண்டியது முறை. அதைவிட்டுத் தம் கக்ஷிக்குவேண்டியவற்றையெல்லாம் ஐயமறத்தெளிந்த துணிபுகளாக்குவதானல், அம்முறையில் வாதமே வேண்டா. சுருக்கமாக, வாதிக்கும்பொருளையே சங்கையற்றமுடிவு இதுவே என்று கூறி அமைந்துவிடலாம். அதற்குத் துணையாகப் பல தெளியப்படாத கொள்கைகளைத் தொடுத்து, அவற்றைத் துணிந்தமுடிபுகளாக்கிப் பிறகு அம்முடிபுகளை எடுத்த கக்ஷிக்குச் சார்பாக்கி, அல்லற்படவேண்டிய அவசியம் எதுவுமே இல்லை.

## II. இரண்டாம் தூண்.

இனி, பண்டிதரவர்கள் தேவி, வேண்மாள் என்ற பதிகச்சொற்கள் 'மகள்' என்ற பொருளில் வரும் என்றும், அதைச் சில சாஸனத்தொடர்களாலும் "வடநூல்வல்லார்வாய்க்கேட்டும் அறியத்தகும்" என்றும் வாதிக்கிறார்கள். பாரதியவர்கள், தேவிச்சொல் தனித்துநிற்கும்போது பெண்தெய்வத்துக்கும், 'பெருமாட்டி' என்ற பொருளிற் பெண்மைப் பெருந்தகையாருக்கும் மனைவிக்கும் பெயராகுமென்று விதந்துகூறி, "அது ஒரு ஆண்மகனைக்குறிக்கும்பெயரொடு புணர்ந்துவருமிடத்தில் அவனுக்கு அச்சொற்குறிக்கும்பெண் மனைவியென்ற முறைப்பொருளொன்றையே குறிப்பதாகும்; இச்சொல் வேறு முறைப்பொருளில் வருதற்கு இலக்கண இலக்கிய ஆதாரம் ஒன்றுமில்லை" என்று வரையறை செய்துள்ளார்கள். இதை மறுக்கவிரும்பும் பண்டிதரவர்கள் தம் கட்டுரையில் இநவேறிடங்களில் தேவிச்சொற்குப் பொருள்விளக்கமுபவன்

னும் யாண்டும் அது மகண்முறைசுட்டும் தக்க இலக்கியமேற்கோள் யாதொன்றும் காட்டினார்களில்லை. பாண்டிமாதேவி என்று சோழன் மகள் இலக்கியங்களிற் சுட்டப்படுவதால் மகண்முறைப்பொருள் தேவிச் சொற்குண்மை துணிகின்றார்கள். பாண்டிமாதேவி என்றால், பாண்டி நாட்டரசியென்றாவது பாண்டியன்மனைவி என்றாவது பொருள்படுவதன்றி, மகண்முறைமை குறியாது. சேக்கிழாரும் பிற பெருந்தமிழ்ப் புலவர் பலரும் இவ்வாறே இச்சொல்லை ஆண்டுள்ளார்கள்

"தென்னர் கொற்றவன்றேவி" (திருஞான. செய். 610)
"தென்னவன்பெருந்தேவி" ( ஷை 671)
"பாண்டிமாதேவியாரும்" ( ஷை 717)
"தென்னவன்றேவியாரும்" ( ஷை 745)
"கொற்றவன்றேவியாரும்" ( ஷை 751, 771)

எனப் பெரியபுராணத்திலும்,

"பங்கயச்செல்வி பாண்டிமாதேவி"
"வழுதிக்குமாபெருந்தேவி"

எனத் திருஞானசம்பந்தர் தேவாரத்திலும்,

"அத்திபதியெனுமரசன்பெருந்தேவி" (9-ம் காதை 42-ம்அடி.)

என மணிமேகலையிலும்,

"அலர்மழையும்...கங்கைகொண்டசோழன்தேவி" (தாழிசை 223)
"தென்னராதி நராதிபரானவர் தேவிமார்" (தாழிசை 313)

என்று கலிங்கத்துப்பரணியிலும்,

"தேவியும் இளவலும் தொடரச்செல்வனை" (தைலமாட்டு. செய் 21)
"தேவியைப்பிரிந்தபின்னைத்திகைத்தனை" (வாலிவதை. செய் 78)
"கோக்கள்வைகும் முற்றத்தான்முதற்றேவி"
"தன்மெய்யைவிற்பதாக்கி இறந்தானதன் இளந்தேவி" } (குகப்படலம்- 65, 68.)

எனப் பலவிடத்துக் கம்பராமாயணத்திலும், இன்னும் இப்படியே எண்ணறும் பழம்பெருநூல்களிலும் 'தேவி'ச்சொல் மனைவிப்பொருளிலேயே முறைப்பெயராய் ஆண்பாற்பெயரோடுபுணர்ந்துவரக் காணலாகும். ஆனால் நல்லிலக்கியங்களில் எங்கும் ஆண்பெயரோடுகூடி வேறு முறைப் பொருளில் இச்சொல் வழங்கினதாய் விளங்கவில்லை. வடமொழியிலும்

இதுவே முறையென்று தெரிகிறது. ஆன்ற தமிழிலக்கியமேற்கோள் ஒன்றுகூடத் தேவிச்சொல் ஆண்பாற்பெயரொடு தொடர்ந்துநின்று மகண்முறைசுட்டியதாகப் பண்டிதரவர்கள் காட்டவில்லை. வடமொழியில் அத்தகைய ஆட்சி உண்டென்பதற்கும் 'வடநூல்வல்லார்வாய்க் கேட்டறிய'ச் சொல்லுகிறார்களேதவிர, அப்படிக் கேட்டறிந்த தாமே அவ்வாதாரத்தைக் குறிக்கவும் துணியவில்லை. மரியாதைகுறிக்கும் பொதுப் பெயராய்ப் பெண்களுக்குத் தேவிச்சொற் பிரயோகமில்லையென்று பாரதியவர்கள் யாண்டும் கூறவில்லை ஆண்பெயரொடு தொடர்ந்து முறைமை குறிக்குமிடங்களில் அது மனைவிப்பொருளில் வருமென்பதே பாரதியவர்கள் வற்புறுத்துவதாகும். இதற்கு மாறுபட்ட மரபாட்சியுளதாகில், நேரே அடிப்பட்ட நல்லிலக்கிய மேற்கோள்காட்டி அதை நிறுவிவிடலாம். அதைவிட்டு, தேவிச்சொல் அரசி, கோமகள் என்ற மரியாதைச்சொல், அல்லது பட்டப்பெயராய்வருமிடங்கள் உண்டென்று வாதமற்றவிஷயத்தைக் கூறுவதும், "தேவிச்சொல்லின்பொருண்முறை ஒருபுறம் நிற்க" என்று எடுத்துக்கொண்ட முக்கியவாதத்தையே புறக்கணித்து ஒதுக்குவதும் உண்மைபாராய்வார்முறையாகா.

காலதேசவர்த்தமானங்கள் ஒன்றுனும் உண்மை துணியப்படாத சில சாஸனங்களில் தமிழ்மொழிமரபு, செந்தமிழ்வழக்குகள் ஒன்றுமறியாத சில கம்மியர்செதுக்கிவைத்த தொடர்மொழிகளைக் காட்டி, அத்தொடர்களில்வரும் தேவிச்சொல் செந்தமிழ்கூறுநல்லுலகத்தில் அச்சொல்லுக்கு மகட்பொருள் வழக்குண்மையை நாட்டுவதாகக் கூறுகிறார்கள். இக்கம்மியர்கூற் றுண்மையானாலுங்கூட, அதுகொண்டு ஆன்ற தமிழ்ப்புலவர்பாட்டுக்களில்வரும் சொற்களுக்கு மரபுவகுப்பது ஒரு புத்தப்புதுப் புலமைமுறையாகும் மேலும் அச்சாஸனங்களில்வரும் வானவன்மாதேவி மீனவன்மாதேவி என்ற தொடர்களில் வானவன் மீனவன் என்பனவெல்லாம், சேர பாண்டியரையே இயற்கைமுறையிற் குறிப்பனவோ அல்லது சேர பாண்டியரை வென்ற புகழுடைய பாண்டிய சோழ வேந்தர் தம் மெய்க்கீர்த்திகுறிக்கப்புனைந்துகொண்ட காரண இயற்பெயர்களோ தெளியவேண்டும் சோழ பாண்டியரை வென்ற சேரனை 'வளவன்' 'புகார்ச்செல்வன்' 'பாண்டியன்' 'மதுரைமன்னன்' என்று அவன் வென்றிப்புகழ்படக் கூறும் வழக்குண்மை பண்டையிலக்கியமறிவார் பலரும் அறிந்ததாகும். தம்முறையில் அவ்வாறு புகழ்ப்புனைவுப்பெயர்கொண்ட

பாண்டியன் ஒருவன் மனைவியை அவன்விருதுகருதி வானவன்மாதேவி என்று சாஸனக்காரர்கூறின், அதுவும் பிழையாகாதா? ஒரு பாண்டியன் அல்லது சோழன்மனைவியான வேளிர்மகளொருத்தியை அவள்பிறந்த குலங்கிளத்தி மகள்முறை குறிக்கும் நோக்கத்தோடு, அவளை அவள் கணவனொடு புணர்த்திப் பாண்டியன்தேவி, சோழன்தேவி என்று கூறாமல், அவள் தந்தைபெயரொடு புணர்த்தி இவ்வூர்கிழான்தேவி என்று கூறும் நல்லிலக்கிய வழக்குண்மை பண்டிதாவர்கள் காட்டும்வரை, பாரதியவர்களின் தெளிவுரையே அமைவுடைத்தாகும். மேலும், தேவி வேண்மாள் என்றசொற்கள் ஆண்பெயரொடு தொடரும்போது அவ்வாண்மகன் மனைவி என்ற முறைப்பொருளிலேபேவரும் என்பதற்குச் சங்க இலக்கியத்தோடு கம்பன் சேக்கிழார் முதலிய இடைக்காலத் தலைமைத் தமிழ்ப்புலவர்வழக்கும், தற்காலத் தமிழுலகில் தலைநின்ற தமிழ்ப்புலமைப்புகழுடைய மஹாமஹோபாத்தியாய உ. வே. சாமிநாதையரவர்கள் போல்வாரின் குறிப்புக்களுமே போதிய ஆதாரமாகும். விசதமாக "வேண்மாள்"-என்றசொல் கோவேந்தர் அல்லது சிற்றாசர்மனைவியைக் குறிக்கும் என்று மஹாமஹோபாத்தியாயரவர்கள் எழுதிய குறிப்பைப் பாரதியவர்கள்கட்டுரையில் விதந்துகாட்டியுமிருக்கிறார்கள். எதையும் எப்படியும்கூறிப் பிறர்மதத்தைப் பழித்துவிடுமுறைக்கன்றி, உண்மை காணும் ஆராய்ச்சிக்கு இத்தகைய வாதங்கள் போதா. ஆராய எடுத்துக் கொண்டபொருளின் உண்மையை ஐயமறத்தெளிவிக்கும் வாதமும் சான்றுகளுமே வேண்டப்படுவனவாம்.

இனி இத் தேவிச்சொல்லைப்போலவே வேண்மாட்சொல்லுக்கும் பண்டிதாவர்கள் பண்ணும் வியாக்யானம் வியப்பைவிளைக்கத் தவிராது. வேண்மாள் என்ற சொல் வேளிர் அல்லது குறுநிலமன்னர்தேவியரையும் கோவேந்தர்தேவியரையும் குறிக்கும் என்று பாரதியவர்கள் காட்டிய குறிப்பை மறுக்கவரும் பண்டிதாவர்கள், "வேண்மாள்" என்பது மனைவிப்பொருளில் வருமானால் "வேண்மான்" என்பதற்கும் கணவன் என்றே பொருளிருக்கவேண்டுமென்றும், அவ்வித வழக்கின்மையால் வேண்மாட்சொல்லுக்கும் தேவிப்பொருள் கிடையாதென்றும் விரிவாகக் கூறுகிறார்கள். ஒரு ஆடவன்பெயரொடுபுணர்ந்துவரும்போது தேவிச்சொல் அவன்மனைவியென்று பொருள்படுவதும், தனியேநின்று ஒரு பெண்ணைக் குறிக்கும்போது அச்சொல் பெரியாள் சீமாட்டி என்று

மரியாதைப் பெண்பொதுமைப்பெயராய் முறைமைகுறியாதமைவதும் யாவரும் அறிந்ததாகும். அதுவேபோல் "அரசி" என்பது அரசனின் கோமனைவி என்று பொருள்தருவது இயல்பு. அதனால், "அரசன்" என்ற சொல் ஒரு அரசியின் கணவன் என்றே பொருள்படுமென வற்புறுத்துவது விதண்டைவாதமாகும்.

மேலும், "வேண்மாள்" என்பது செங்குட்டுவன்மனைவிக்கு இயற்பெயராகலாமோவென முதலில் ஐயுற்ற மஹாமஹோபாத்யாயவர்களே, தம் ஆழ்ந்த ஆராய்ச்சியின்பயனாகப் பின் பதித்த பதிற்றுப்பத்தின் அரும்பத அகராதியில் விசதமாக விளக்கியுள்ள குறிப்பு மிகவும் சிந்திக்கத்தக்கது. "வேண்மாள்–சிற்றரசன்மனைவி; முடியுடையரசன்மனைவி. வேண்மான்-சிற்றரசன்" என்று மஹாபண்டிதரான ஸ்ரீமத் சாமிநாதையரவர்கள் தெளிவாக இச்சொற்களின்பொருள்களை விளக்கியுள்ளார்கள். எனவே பாரதியவர்கள் வேண்மாட்சொல்லுக்குத் தாமே ஒரு புதுப்பொருள் கற்பிக்கவில்லை என்பது தெளிவாகிறது. ஆகவே, "வேண்மாள்" என்பது இயற்பெயராகுமேயன்றித் தேவிப்பொருளில் வாராது என்னும் பண்டிதரவர்களின் வல்வழக்குக்கு முதலில் ஸ்ரீ சாமிநாதையரவர்கள் இச் சொற்பொருள் அறியமாட்டார்கள் என்று கொண்டுதீரவேண்டுவது இன்றியமையாததாகும். இவ்விருபண்டிதருள், சங்கநூற்பயிற்சியும் சங்கஇலக்கியங்களில்வரும் சொற்பொருளாட்சிமுறையுணர்ச்சியும் யாரிடம் நிரம்பஎதிர்பார்க்கலாமென்பதைத் தமிழர் நன்கறிவர். ஆகவே இதுபற்றி மேலும் எழுதவேண்டா.

இனிச் சிலப்பதிகாரத்துக் காட்சிக்காதையில்வரும் "இளங்கோ வேண்மாள்" என்ற தொடர்பற்றிய ஆராய்ச்சியைப் பாரதியவர்கள் தம் கட்டுரையில் இனிது விளக்கியுள்ளார்கள். இலவந்திமாடத்தில் இளங்கோவும் கோத்தேவியும் ஒருங்குடனிருக்கத் திருவோலக்கத்திலிருந்த செங்குட்டுவன் மலைவளங்காண விரும்பினான். விரும்பியவன் அவ்விருவருடனும் பரிவாரங்களுடனும் மலைகாணப் புறப்பட்டான்—என்று அடிகள் தம் இனிய பாவடிகளால் தெளிவாக்கியுள்ளார். அதை மறுத்து மலைவிப்பதற்காகப் பண்டிதரவர்கள் இளங்கோவடிகள் துறவியாதலால் தம் தமயன்திருமுன் இலவந்திகையில் இருந்திருக்கமுடியாதென்றும், தம்மைத் தாமே இளங்கோவெனச் சுட்டமாட்டாரென்றும் வாதிக்கிறார்

கள். தமயனுடனிருந்து தாம்பிறகு அவனுடன் மலைகாணச்சென்று அங்கே குறவர்கூறவும், தம்முடன்போந்த சாத்தனார்கூறவும் கண்ணகி வரலாறு கேட்டுணர்ந்த இளங்கோவடிகள் அவ்வரலாற்றுண்மையை விரிக்குமிடத்து, "இளங்கோ" எனத் தம்மைப் பிறன்போலமைத்துக் கூறித் தம் தமயன் கோமனைவியான தம் மைத்துனியை அவள்பெயர் கூறாமற் கோமனைவி என்னும் பொருளுடைய "வேண்மாள்" எனும் சொல்லாற்சுட்டிக் கதைநடத்தியிருக்கும் செவ்வி பாராட்டவேண்டியதை விட்டு இத்தொடருக்கு விபரீதப்பொருளமைக்க வல்வழக்கிடுவாரோடு வாதமில்லை. உண்மையறியவிரும்புபவருக்கு இத்தொடரே இனிது பொருள்விளக்கிநிற்கும்.

மேலும், இத்தொடருக்குச் செம்பாகமான நேர்பொருள் தம் கொள்கைக்கு முரணுவதால் அதை விலக்கி, வேறு பொருள்நாட்டும் தம் அருமுயற்சிக்குத் துணையாகப் பண்டிதரவர்கள், இலவந்திகையிற் கோத்தமயனைக் காணச்சென்று, ஆண்டு அவனுடன் இருப்பது அடிகளின் துறவுக்குப் பொருந்தாவொழுக்கமாகுமெனத் துணிகிறார்கள். இதுவே தவறுகில், கேவலம் தண்பொழிலாட்டு முதலிய தனி இன்ப நுகர்ச்சி விருப்பத்தாற் செங்குட்டுவன் பெண்பரிவாரப்பெருக்குடன் மலைவளங்காணப் புறப்பட்டபோது பண்டிதரவர்கள் கொள்ளுகிறபடி அவன் அழையாமலே உடன்சென்று, அவன் விளையாட்டயர்ந்த மலைச் சாரலில் உடனிருந்து களித்து, ஆண்டு நிகழ்ந்த நிகழ்ச்சிகளனைத்தையும் நேரில் இளங்கோவடிகள் தாமும் தமயனுடன்சேர்ந்து கண்டு கேட்டு உண்டு உணர்ந்தனுபவித்ததாகச் சிலப்பதிகாரம் பண்டிதரும் மறுக்கமுடியாதபடி தெளிவாகக் கூறுவதற்கு இவர்கள் என்ன சொல்லுவார்களென்று தெரியவில்லை. விதண்டைவாதங்களிற் புகுவதால் ஏற்படும் இடர்ப்பாடுகள் இத்தகையவாய் அப்படிப்புகும் பண்டிதரையும் முன்பின் முரண்பட் டவலமடையச்செய்யாதொழியாது என்பது இங்கு இவர்களின் வாதவிளைவுப்பயன்களால் விசதமாகிறது.

இனி, மருமக்கட்டாயமுடையாரும், தாயத்திற்குமட்டும் மருமக்களையும், ஏனைச் சமயச்சார்பான சேம ஈமச் சடங்குகளுக்கு மக்களையுமே உபயோகிப்பது நாடறிந்ததாகும். பாரதியவர்களும் இதனைத் தம் கட்டுரையிற் றெளிவித்திருக்கிறார்கள். ஆகவே, சோமன்னரை அவர்தம் புகழுடைய புதல்வரொடு புணர்த்திப் புலவர்பேசுவதில் வியப்பெதுவுமில்லை,

எனவே அஞ்சியைப்பாடிய ஔவையின் புறப்பாட்டும், பதிற்றுப்பத்தில் நச்செள்ளையார், கபிலர், அரிசில்கிழார் இவர்கள் வாக்குக்களும் சேருக்குச் செவ்விய புதல்வருண்மைகுறிப்பது இயல்பேயாகும். ஆனால் எஞ்ஞான்றும் யாண்டும் எப்புலவரும் சேரனொருவனின் நேர்மகனைச் சேரநாட் டரசுரிமைகொண்டதாகக் குறியாமையே ஈண்டு ஆராய்ச்சிக்குச் சிறந்த ஆதாரவாமன்றிக் கேவலம் சேருக்கு மக்களுண்டு என்றுசுட்டும் சில பாடல்கள் இவ்வாராய்ச்சிக்கு எவ்வகையினும் பயன்படா.

## III. மூன்றும் தூண்.

### தொல்காப்பியச்சூத்திரவாதம்.

இதுவேபோலத் தம் மறுப்புரையின்முடிவில் தொல்காப்பியத்தில் "இயற்பெயர் முன்னர்த் தந்தை முறைவரின்" என்னுஞ் சூத்திரமுண்மையைக் காரணமாக்கி மலைநாட்டாருள்ளிட்ட தமிழரெல்லாருக்கும் எஞ்ஞான்றும் மக்கட்டாயமே பண்டைமுதல் நின்ற மரபாதல்வேண்டுமென்று ஒருதலையாகப் பண்டிதரவர்கள் தம்மத நிறுவத் தலைப்படுகின்றார்கள். ஒருநூலிற் சொல்லப்படுவது உண்மையாகலாமன்றி, அது, குறியாதனவெல்லாம் இல்லாதனவாமென்பது இழுக்குவாதச்சழக்குரையாகும். அம்முறையில், முதலிற் றொல்காப்பியத்திற் சொல்லப்படாதவெல்லாம் தமிழுலகில் இல்லாதனவென்று துணியல் கூடுமா? இந் நூலில் தமிழகத்தில் உள்ள சில சொல்லப்படுவன என்பதொன்றே உண்மையாகும்.

இரண்டாவதாகத் தொல்காப்பியர், தமிழ்மொழியிலக்கணம் கூற வந்தவரேயன்றித் தமிழ்மக்களின் அனைத்து வழக்கங்களையும் தொகுத்துரைக்கும் சரிதமெழுதினவரில்லை. அதனால் எல்லாத்தமிழரின் தாய வழக்கவகைகளனைத்தையும் அவர் மொழியிலக்கணநூலிற் காணவிரும்புவது ஆகாயத்தாமரை அவாவுவதாகமுடியும்.

கடைசியாக, "செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு.......... முறைப்பட எண்ணித்" தாம் தொகுத்துப் பாண்டியன் அவையத்தரங்கேற்றிய மொழியிலக்கணப் பனுவலில் தொல்காப்பியர், செந்தமிழ்சேராத சேரநாட்டுத் தாயமுறையிலக்கணத்தை விளக்க அந்நூலில் இடந்தேடாரன்றே? செந்தமிழ்நாடு தென்புலப்பாண்டிநாடாயினுமாகுக; அன்றி வையையாற்றின் வடக்கெனமடக்கிய பிறர்கொள்கைப்படி சோனாட்டின்

பகுதி தொகுத்த கிழத்தமிழ்நாடாயினுமாகுக எனைத்தாயினும் குடபுலச்சேரநாடாகாதென்பது ஒருதலை. ஆகவே, சேரநாட்டுத் தமிழ் மொழியியற்கைவழக்குகளைக்கூட முழுதும் தம்நூலில் வரையறவு செய்வது தொல்காப்பியர்கருத்தாகாதபோது, அந்நாட்டுத் தாயவழக்கை அவர் அதிற் பேசவேண்டியது அவசியமா? அவர் அதனைச் சுட்டாத காரணத்தால் மருமக்கட்டாயமுறை பழமையற்றது, அன்றியும் முன்னோர் அறியாததொன்று என்பதனைக்கூறி ஒருபடியாக முடித்துவிடல் முறையாமா? அம்முடிவு உண்மைதேடவுதவும் உயர்வாதத்துறையினர்கள் கொள்வதொன்றோ?

## IV. இடையிடையே பண்டிதர்கூறும் வேறுசில விதண்டைகளின் விலைமதிப்பு.

(i) இனிச் "சேரலாதற்குப் பதுமன்றேவி ஈன்ற மகன்" என்ற தொடரில், 'தேவி என்பதை மனைவி என்று கொண்டாலும், அத்தேவியைச் சேரலாதனுக்குச் சோதரியென்று விதந்துசுட்டாததால், பதுமன் மனைவியீன்றமகன் ஆதனுக்கு மருகன் என்று கொள்ளுதற்கு அவசியமில்லை' என்றுகூறி, அதனோடும் அமையாமல் பண்டிதரவர்கள் அப்பதுமன்மனைவியே, சேரலாதற்குக் காமக்கிழத்தியாகவோ பகைவனை வென்றுகொண்ட சிறைப்பெண்டாகவோ அமைந்துநின்று ஈன்றுதந்த மகனை அத்தொடர் குறிப்பதாகவும் கொள்ளலாமென்று கூசாது பேசுகிறார்கள். பாரதியவர்கள் இத்தகைய கயமைவாதமெழாமற் காப்பதற்கு வேண்டியன கூறியும், அது நிற்கவில்லை. பாட்டுடைச் சேரனைப்பாடி அவன்பாற் பரிசுபெறவிரும்பிய புலவர் அவன்தாயை ஒருவனைமணந்து மற்றொருவனுக்கு மகப்பெற்றனள் என்று விருதுகூறத் துணிவரா? அப்புன்மையொழுக்கம் உண்மையெனினுங்கூட அதை மறையாமற் பாட்டில் விதந்து சுட்டிப் பாராட்டுவது கவிமரபா? ஒருபோதும் இது நினைக்கவுங்கூடாத இழிவழக்கன்றோ? ஆகவே இப்பெரும்புலவர்தம் அருந்தொடருக்கு அறிஞரெல்லாம் ஆன்றவொழுக்குடனமைந்த செம்பொருளன்றிப் பிறிதுகொள்ளார் என்பது ஒருதலை. இதுநிற்க.

பதிற்றுப்பத்தின் பதிகத்தொடர்களைத் தொகுத்து ஒத்துநோக்கி ஆராயின் அவற்றின் அமைப்புமுறை விசதமாகும். அம்முறையை அறிந்தவுடன் பண்டிதரவர்கள்வினாக்களுக்கு இடமின்றித் தக்க சமா

தானங் காணலாகும். அதனால் முதலில் இவ்வமைப்புமுறையைத் தெளியவேண்டியது அவசியமாகும். இதற்கு மருமக்கட்டாயவழக்கு முறைகளை மறவாமல் மனத்திற்கொள்ளவேண்டும். இதற்காகவே பாரதியவர்கள் தம் கட்டுரையின் முகவுரையில் இம்முறைவழக்கங்களில் முக்கியமானவற்றை நினைவுறுத்தியிருக்கிறார்கள். அவற்றுள், இவ்விடத்திற்குப் பொருத்தமானவற்றைமட்டும் மீட்டும் இங்கே குறிக்கின்றேன். மருமக்கட்டாயக்குடியில் ஒருவனுக்குப் பிறங்கடைகள் (வாரிசுகள்) ஆவார் அவனுடன்பிறந்த சோதரிமார்பெற்ற மக்களாகவே இருக்கவேண்டுமென்ற நியதியில்லை. அவன் தாய்வழியிற் பெண்பிறந்தார் எவர்பெற்ற மக்களேனும் அவரெல்லாம் அக்குடியிற் காரணவரான தலைவனுக்கு அநந்தரவர் அல்லது சேஷகாரராகித் தாயவுரிமை பெறுபவராவார். பெண்வழித்தாயக்குடித் தலைவனுக்கு அவன்சோதரிமார், அன்னையர்சோதரிகள், அவர்பெற்ற பெண்மக்கள்—இத்திறத்தவர் எவ்வெவர்தம் வழிப்பிறந்த மடவார்கள் யாவரேனும் ஈன்றெடுத்த ஆண்மக்கள் அனைவருமே தாயமுறையில் மருமக்களே. எனவே, ஒருவனுக்கு வழித்தோன்றலாவான் முன்னவன்சோதரிமகனுயினுமாகலாம், அன்றி, அவன்தாய்வழியிற்பிறந்த பெண் எவள்மகனுயினுமாகலாம். ஒரு குடியில் இம்மரபுடைய ஒருதலைமுறையாருள் வயதளவில் வரன்முறையேற்படுவதன்றி, சோதரிமார்மக்கள் என்ற சிறப்புரிமை கிடையாது. ஆகவே சேரமன்னருக்குப் பிறங்கடையாய்ப் பதிகத்திற்சுட்டப்பெறும் பாட்டுடைச்சேரரைப் பதிகங்களில் அவர்குடித் தலைமைச்சேரருக்கு ஒருவயிற்றுச் சோதரிமக்கள் என்றே நிரந்தரமாய்ப்பேசற்கில்லை. சோதரிமக்களுமாகலாம்; அன்றிச் சோதரிமுறையுடையாராய ஒருவயிற்றுதியாப் பிறபெண்டிர்மக்களுமாகலாம்; மருகியர்மக்களுமாகலாம்; மருகிமகள் புதல்வருமாகலாம். இவ்வாறுவரும் முறைகள் எதனையும் பொதுவாகக் குறிப்பதைவிட்டுச் "சோதரியீன்றமகன்" என்று விதந்துகூறினல், உடன்வயிற்றுதியாப் பெண் பெற்ற பிறங்கடையை விலக்கநேரும். இதனல் இப்பதிகங்களையமைத்த புலவர் இவ்வுணர்ச்சியுடன் பொதுமுறை தழுவத்தக்க சொற்பெய்து தொடரமைத்துக் கூறிச்செல்வர். இம்முறையில் இப்பதிகத்தொடர்களை ஆராய்ந்தால், பதுமன்றேவி சோலாதன் தாய்க்குடிப்பிறந்த கோப்பெண்டென்பது இனிது போதரும்; எனினும் அவள் ஆதனுடன் ஒருவயிற்றிலுதித்தவளாயிருக்கவேண்டாம்;

ஆனல், அவன் தாய்வழியில் மகப்பெற்றுக் குடிவளர்க்கும் உரிமையுடையளாகவேண்டுவது அவசியமாகும். எனவே பதிகத்தொடரமைப்பால் நாம் அறிவது இது:—முதலிற் குலத்தலைவனுன கோச்சேரன் குறிக்கப்படுவதும், அதன்பின்னே அவனுக்கு வழித்தோன்றலான பாட்டுடைச்சேரனைப்பெற்றெடுத்த இருமுதுகுரவரை விளக்குவதும், இறுதியில் அக்குரவர் முதற்குறித்த சேரனுக்கு வாரிசாகப் பெற்றீந்த மகனே பாட்டுடையான் எனத் தெரிப்பதுமேயாம். இப்பொதுமுறை எல்லாப் பதிகங்களிலும் தவிராது போற்றப்படுவதைச் சிந்திக்கவேண்டும்.

| | |
|---|---|
| இரண்டாம் பதிகம். | உதியஞ்சேரற்கு (1) வெளியன்வேண்மாள் (2) ஈன்ற மகன்—இமயவரம்பன் (3) |
| நான்காம் பதிகம். | சேரலாதற்கு (1) வேளாவிக்கோமான் பதுமன்றேவி (2) ஈன்ற மகன்—களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் (3) |
| ஐந்தாம் பதிகம். | சேரலாதற்கு (1) சோழன் மணக்கிள்ளி (2) ஈன்றமகன்—செங்குட்டுவன் (3) |
| ஆறும் பதிகம். | சேரலாதற்கு (1) ஆவிக்கோமான் தேவி (2) ஈன்றமகன்—ஆடுகோட்பாட்டுச்சேரலாதன் (3) |
| எழாம் பதிகம். | அந்துவற்கு (1) ஒருதந்தையீன்றமகள் பொறையன் பெருந்தேவி (2) ஈன்றமகன்—செல்வக்கடுங்கோ (3) |
| எட்டாம் பதிகம். | கடுங்கோவுக்கு (1) பதுமன்தேவி (2) ஈன்றமகன்—பெருஞ்சேரலிரும்பொறை (3) |
| ஒன்பதாம் பதிகம். | இரும்பொறைக்கு (1) மையூர்கிழாஅன்வேண்மாள் (2) ஈன்றமகன்—இளஞ்சேரலிரும்பொறை (3) |

இவ்வாறு மேல்விளக்கிய அமைப்புமுறை இப்பதிகங்களில் எல்லாவற்றுள்ளும் நிற்கின்றது. செல்கெழுகுட்டுவனை முன் இரண்டாம் பதிகத்தில் விரித்து விளக்கிய இமயவரம்பன்தம்பி என்று கூறிவிட்டதால் மூன்றும்பதிகத்தில், இம்மூன்றுவிவரமும் கூறியதுகூறுமல் ஆண்டமைத்துக்கூறியதாகின்றது. இதனை உற்றுநோக்குவாருக்கு முதற் குறித்தவன் குலத்தலைவன் என்பதும், இறுதியிற் குறித்தவன் முதல்வனுக்கு வழித்தோன்றலான வாரிசு என்பதும், இடையிற் பேசப்படுபவர் இறுதியிற்குறித்த பாட்டுடைச்சேரனுக்குத் தந்தை தாய்மார் என்பதும் விளங்கவாகும்.

(ii) இதுபோலவே பதிகங்களில் "ஈன்றமகன்" எனவரும் தொடர்களை இறுகப்பிடித்துக்கொண்டு, சேரர் மருமக்கட்டாயிகளாவாராயின் இன்னசேரனுக்கு இனையர் "ஈன்ற மருகன்" என்று குறிக்கவேண்டுமென்றும் அதைவிட்டு "ஈன்ற மகன்" என்றே பதிகஆசிரியர் கூறிப்போவதால் பதிற்றுப்பத்தின்சேரரெல்லாம் மக்கட்டாயிகளேயாகவேண்டுவது ஒருதலை என்றும் பண்டிதாவர்கள் வாதிக்கிறார்கள். பதிகங்களின்முதலிற் குறித்த குலத்தலைவரான அம்மான் சேரனுக்குப் பாட்டுடைத் தலைவன்முறைமைமட்டும் குறித்தமைவதானால், முன்னவனுக்குப் பின்னவன் 'மருகன்' என்றே புலவர் குறித்திருப்பார். ஆனால், பதிகப் போக்கை நிதானமாக நோக்குவாருக்கு அவ்வாசிரியரின் நோக்கம் தெளிவாக வெளியாகும். பதிகங்களில், அவற்றின் ஆசிரியர் அம்மான் மருகர்களைமட்டும் குறித்தமையாமல், இன்ன பெருஞ்சேரனுக்கு வழித் தோன்றலாக இன்னவனின்மனைவி இன்னார் ஈன்ற இவன் என்று பாட்டுடைச்சேரனோடு அவன்குலப்பெரியவனான அம்மானையும் அவனை ஈன்றுதந்த தந்தைதாயரான அவனமுதுகுரவர்களையும் ஒருங்கே விளக்கிப் போகிறார் என்பது களங்கமற விளங்குகிறது. எனவே, ஒருவனின் பெற்றோரையடுத்து அவரொடு அவன்தொடர்புசுட்ட வரும் முறைச் சொல் "மகன்" என்பதன்றி மருகனாகாது. பதிகங்களிலெல்லாம் "ஈன்றமகன" என்னும் தொடர் பெற்றோர்பெயர்கட்கும் பாட்டுடையான் பெயருக்கும் இடையேநின்று அன்னவர்தம் இயல்முறைமை துலக்கும் இயைபுடையதாகநிற்கக் காண்கிறோம். ஆதலால் இப்பதிகங்களில் இனையர் ஈன்ற மருகன் என்று கூறியிருந்தால் அது விபரீதமாகும். இன்னவர் "ஈன்ற மகன்" என்று நிற்பதே சாலப் பொருத்தமும் அழகும் உடையதாகிறது. இத்தொடரமைப்பின்குறிப்பும் தெரிநிலையுமான பொருள்களின் பொருத்தமெல்லாம் பாரதியவர்களின்கட்டுரையில் தெளிவாக விளக்கப்பட்டிருப்பதால் மீட்டும் அவற்றை இங்கு விரிப்பது மிகையாகும்.

(iii) இனி, 'பொறையன்பெருந்தேவி' என்று 7-ம்பதிகத்தில்வருவதுகொண்டு, அவள் முடியுடைப் பேரரசனின்மனைவியாகவேண்டுமென்றும், வேள்குலக் குறுமன்னன்மனைவி யாரையுமே 'பெருந்தேவி' என்று கூறுவது வழக்கில்லையென்றும், அதனால் பொறையன்தேவி எனப் படு

பவள் பொறையனுக்கு மகளும் அந்துவஞ்சேரலுக்குக் கோமனைவியுமாக வேண்டுமென்றும் பண்டிதாவர்கள் வாதிக்கிறார்கள்.

முதலிற் பண்டிதாவர்கள் சொல்லுகிறபடி முடிவேந்தன்மனைவியை எப்போதும் மாதேவி பெருந்தேவி என்றே கூறவேண்டுமென்றுவது, முடிபுனையாத குறுமன்னர்மனைவிமார் ஒருபோதும் அவ்வாறு கூறப் பெறார் என்றுவது ஒருவித நியதி கிடையாது. சாதாரணமாக வேந்தர் மனைவியரை — தேவி — பெருந்தேவி — கோப்பெருந்தேவி — மாதேவி — எனப் பலவகையாலும் கவிகள் தொடர்நடைகளின் இயல்புக்கும் சந்தர்ப்ப அமைப்புக்கும் பொருந்தக்கூறுவதும், குறுமன்னர்மனைவிமார் பெண்மைப்பெருந்தகையாரை மாதேவி — பெருந்தேவி எனப் பாடுவதும் இயல்பும் பொருத்தமுமேயாகும். இதனை மறுக்கும் மரபு விதி ஒன்றையும் பண்டிதாவர்கள் யாண்டும் காட்டினார்களில்லை. பேரரசர்மனைவிமார் சிலரை மாதேவி — பெருந்தேவி எனக் கூறிவந்த சில சந்தர்ப்பங்களை மட்டும் தொகுத்துக்காட்டி அதிலிருந்து தம் வாதத்துக்காக ஒரு புது விதியை வகுத்துக்கொள்ளுகிறார்கள். இங்கு இவர்கள் கூறுவதற்கு மாறாகத் தமிழகத்தில் வழக்குண்மையைப் பண்டிதாவர்களே தம் மறுப்புரையிற் பிற இடங்களில் வேறு சந்தர்ப்பத்தில் உதாரணம் காட்டியுள்ளார்கள். வேள் — ஆய்குலத்தலைவன் ஒருவன்மனைவி 'ஆய்குலமாதேவி' முருகன்சேந்தி என்று அழைக்கப்பட்டதைக் கூறுகிறார்கள். இவள் பெருவேந்தன் எவனுக்கும் மனைவியில்லை; மகளுமில்லை. இச்சேந்தி என்பாள் ஒரு முருகவேளின் மகள்; வேறொரு வேளுக்கு மனைவியாவள். இவளை மாதேவி என்றதும், முடியுடைப் பெருவேந்தன் பூதப்பாண்டியன்கோமனைவி பெருங்கோப்பெண்டென்னும் இயற்பெயருடையாளைப் புறநானூற்றில் வாளா 'பூதப்பாண்டியன்தேவி' என்றே கூறிப்போவதும் கவனிக்கத்தக்கது. அன்றியும், அடியில்வரும் பெரும்புலவர் பாவடிகளில் முடியுடைப்பெருமன்னர்கோமனைவிமாரை வாளா தேவி என்று அடையடாத சொல்லாற் கூறிப்போவதும் அறியத்தக்கது.

சிலப்பதிகாரத்தில்,

"காவலன் தேவிக்கு ஆவதோர் காற்கணி,"

(காதை 16–வரி 111.)

"வயவேந்தன் தேவி" (ஷை 20–இறுதிவெண்பா–2)

"கோவேந்தன் தேவி," (ஷ 21-1.)

என முடியுடைப் பாண்டியன் கோமனைவியை, இளங்கோவடிகளும்,

மணிமேகலையில்,

"பாடுசென்றணைதலும், தேவி," (காதை-23 வரி-51)

"அஞ்சினேன் அரசன் தேவியென் றேத்தி" (ஷ 24-74).

என முடியுடைச் சோழன் கோமனைவியைச் சாத்தனாரும்,

கலிங்கத்துப்பரணியில்,

"விதுகுலத்தோன் தேவி" (அவதார இயல்)

"கங்கைகொண்ட சோழன் தேவி" (தாழிசை. 22?.)

என முறையே பாண்டிய சோழவேந்தர் கோமனைவியரைச் சயங்கொண்டாரும்,

இராமாயணத்தில்,

"தீய மந்தரை இவ்வுரை செப்பலும், தேவி
தூய சிந்தையும் திரிந்தது,"

(மந்தரைசூழ்ச்சிப்படலம் 77-ம் கவி)

எனத் தயாதச்சக்கிரவர்த்தியின் நேசப்பெருமனைவியாரையும்,

"தேண்டி அவ்வரக்கனைத் திருகித் தேவியைக் காண்டி...."

(கிஷ்கிந்தாகாண்டம், கலன்காண் படலம் கவி-13)

என இராமன் திருத்தேவியையும்—கவிச்சக்கிரவர்த்தியான கம்பரும், இப்படியே இன்னும் பிற பெருந்புலவர் பலரும் தலைபாய பெருவேந்தர் திருமனைவிமாரை பாதோரடையுமின்றி வாளா தேவி என்றே கூறுவதைப் பழைய நூல்களில் யாண்டும் பாக்கக் காணலாம்.

இதையெல்லாம் விட்டு, பதுமன்தேவி பொறையன்பெருந்தேவி என்பனவெல்லாம் அவை குறிக்கும் பெண்டிருக்குச் சிறப்பியற்பெயர்களெனப் பண்டிதரவர்கள் தம் புதுவாதம் நிறுவுதற்காகப் புத்திலக்கணக் கற்பனைகளை வற்புறுத்துகிறார்கள். அவற்றிற்கெல்லாம் மறுப்பெழுதமுயலுவது மிகைபாம் நடுநிலையிற் சிந்திப்போருக்கு இதன் உண்மை கரதலாமலகமாக விளங்கும்.

(iv) இனிப் பண்டிதரவர்களே " 'பெருந்தேவி' என்பது பேரரசர் கோப்பெண்டிர்க்கு வழக்கு"மென்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். கோக்க

ளின் மனைவியர்மட்டுமில்லை; மகளிரும் கோப்பெண்டிராவர் என்பது பண்டிதரவர்களுக்கும் ஒப்பமுடிந்ததாகிறது. ஆகவே, கோச்சேரர் குடிப்பிறந்த பெருமாட்டி குறுமன்னரை வேட்டாலும் கோப்பெண்டே யாவாள்.

அன்றியும், மருமக்கட்டாயக்குடியிற் பெண்டிர் தாம் பிறந்த குடியின் உரிமை பதவிகளுக்கு நல்லுரிமையுடையார். அதனாலும் கோச்சேரர்குடிப்பிறந்த கோமாட்டி வேள்-பொறையனுக்குத் தேவியானதாற் பெருந்தேவிப்பட்டத்தை யிழக்கவேண்டாம். அவள் பெருந்தேவி எனப் பெறுவதனால் அவள் கணவனும் பெருங்கோ ஆவதற்கும் எவ்வித அவசியமுமில்லை. தற்காலத்திலும் கேரளநாடுகளில் அரசர் சகோதரிகள் மகாராணியார் எனப்பெறுவதும், அவர்கணவரை ராஜாக்கள் என்றுகூடச் சொல்லாமல் கோவில் தம்பிரான்மார் என்றழைப்பதும் பிரசித்தம்.

(v) இன்னும், பண்டிதரவர்கள் சிலபதிகங்களிற் சேரவீரரையீன்ற தாய்மாரின்பெயர் குறிக்கப்படாமையைச் சுட்டி, அதனால் அவள் மருமக்கட்டாயக் குடிப்பிறந்தவளில்லை என்று பெறப்படுவதுபோலப் பேசுகிறார்கள். பெயர் சுட்டப்படாமையால் மக்கட்டாயம் நிலைபெறுவதுமில்லை; மருமக்கட்டாயம் உலைவதுமில்லை. கவிவாய்ப்பு நடையமைப்புக்குத்தக்கவிதம் இயற்பெயர்களைச் சுட்டியும் சுட்டாமலும் அடைத்தொடர்கள் தந்தும் தாராமலும் பதிகங்களிற் புலவர் பாடுவதால் அது கொண்டு ஒரு வாதம் எழுப்ப வழியில்லை.

(vi) இன்னும் பதிகத்தொடர்களில் "ஈன்றமகன்" என்றிருத்தற்குரிய பொருத்த நியாயங்களைப் பாரதியாரவர்கள் முன் விரித்திருப்பதால் அதை மீட்டும் விரியாமல் விடுகின்றேன். அதைப்படிப்பவருக்கு இத்தொடர்கொண்டு மக்கட்டாயம் நிலைபெறுதற்கிடமில்லையென்பது தெற்றென விளங்கும்.

(vii) இன்னும், பதிற்றுப்பத்திற்சிலபாட்டுக்களிற் கோச்சேரர்மக்களையும் சுட்டியுள்ள அடிகளைக்காட்டி, அதனாற் சேரர் மக்கட்டாயிகளாக வேண்டுமெனப் பண்டிதரவர்கள் முடிவுசெய்கிறார்கள். மருமக்கட்டாயிகளுக்கு மக்களே இல்லையென்பது பண்டிதரவர்கள் கொள்கையாகலாம். ஆனால் அது உண்மையில்லை. மருமக்கட்டாயமரபுடையவரும் இயற்கை முறைகளையும் அற்புத்தொடர்புகளையும் கடந்தவர்களில்லை. குடியின்

பொதுப்பொருளிறங்குந் துறைகளுக்குமட்டும் கையாளும் தாயமாபு விதிகள் ஆட்சிபெறுமேயன்றித் தத்தம் அன்புத்துறைகளில் இயற்கைத் தொடர்புகள் எங்கும் யார்மாட்டும் என்றும் நின்றுவழங்குவது இயல் பாகும். சேரமன்னர் மருமக்கட்டாயிகளென்றால், அன்னவர் தாம் பெற்ற மக்களை அறவே புறக்கணிக்கும் வனமிருகங்கள் என்று கொள்ளற் கவசியம் சிறிதும் இல்லை. இன்றும் கோளநாட்டில் மருமக்கள்மா புடையார் பலரும் தம் புதல்வர் புதல்விகளைத் தழுவிப் பாமரிப்பதை யும் பாராட்டுவதையும் கண்கூடாகக் காணுகிறோம். கோளமன்னர்மக் களுக்கு அவர் தந்தையர் அரசில் உரிமைகிடையாதென்றாலும், அம் மக்களைத் 'தம்பியர்' என்றும் 'மேனவர்' என்றும் உயரிய பெயர்கள்தந்து பலசிறப்பும் உதவிப் பெருமைப்படுத்துவதை யாவரும் அறிவர். அன்றி யும் இன்றும் ஹிந்துமதம்நடக்கும் கோளநாட்டிற் சமயச்சடங்குகளி லெல்லாம் மக்களுக்கே சிறப்புரிமைதந்தும், மருமக்களுக்குப் பொரு ளுரிமைமட்டுமே கொடுத்தும் வரும் வழக்கத்தை அறியாதாரில்லை. பதிற்றுப்பத்தில் மன்னர்மக்களைக் குறிப்பதாகப் பண்டிதாவர்கள் காட் டும் அடிகளெல்லாம் அவ்வேந்தரின் வேள்விமுதலிய சமயசம்பந்தமான புண்ணியப்பெருமை கூறுவனவாகவே காணுகின்றோம். மன்னருக்கு நன்மக்களுண்டு என்று குறிப்பதால் அவர்களின் அரசுரிமை பெறுதற்கு மருமக்களில்லை என வாதிக்கவருவது, மக்கள்வழியுடையாச ரின் பெருமருகர் சால்புகூறுமிடத்தெல்லாம் அம்மன்னருக்கு மக்க ளில்லையென வாதிப்பதை ஒப்பதாகும். சோர் மருமக்கட்டாயிகளாயி னும், அவருக்கு மணந்துகொண்ட கோமனைவியருண்டு, நன்மக்களு முண்டு என்பதைமட்டும் இப்பாட்டுக் குறிப்புக்கள் தெளிவாக்குமல்லால், தாயமாபை வரையறுப்பதற்கு இவ்வடிகள் எவ்வகையிலும் எனைச்சிறி தும் உதவா. இவ்வடிகளும் இவற்றின் பொருட்பயனும் பாதியவர் களின்கட்டுரையில் விளக்கப்பட்டும் உள்ளன.

இவ்வியாசத்தில் முன் ஓரிடத்திற் கூறப்பட்ட சில கருத்துக்களை மீட்டும் பிற இடங்களிற் குறிக்க நேர்ந்தமைக்கு விசனிக்கிறேன். ஆனால் இடம்நோக்கி ஒருபொருளையே பலசந்தர்ப்பங்களில் வற்புறுத்த நேர்ந்த மையால், படிப்பவர்கள் அதனைக் கூறியதுகூறலாகக்கொள்ளாது பொறுத்திடுவார்களென்று நம்புகிறேன்.

## V. மக்கட்டாயத்தை மறக்கும் மற்றுமோர் குறிப்பு.

இனிச் சேரர் மருமக்கட்டாயமுறையே கையாண்டுவந்தனர் என்ப தற்கு அசைக்கொணாச்சான்று பதிற்றுப்பத்துப்பதிகத்திற் காணப்படு கின்றது. அது மருமக்கட்டாயமுறையை எவரும் மறுக்கொணாது வலியுறுத்தி நிலைநிறுத்துவதுமன்றி, மக்கட்டாயவாதிகளைத் தலை காட்டவொட்டாமல் ஓங்கியடித்து வாயடக்கி, 'உண்மை உலகுள்ளளவும் அழியாது' எனவும் பறையறையும் ஐந்தாம்பத்தின் பதிகஅடிகளாகும். இவ்வாறு தம் வாதத்திற்கு எதிர்நின்று தடைசெய்து பேரிடர்தரும் 5 ம் பதிக அடிகளைப் பண்டிதரவர்கள் துணிவோடு வெகு எளிதில் தமக்குதவச் சமைத்தாளமுயலும் செப்பிடுவித்தை பெரிதும் சிந்தித் தற்குரியது.

மூலத்தைக் கூட்டவும் குறைக்கவும் வார்த்தைகளை இடையிற் புகுத்தவும் எடுக்கவும் எவருக்கும் அதிகாரமில்லை. மாற்றுதொழியின் ஆகாயத்தாமரையாய்வந்து அசம்பாவித முடிவு தருமாயின்மட்டும் ஏற்ற பாடம் தேடநேரும். அன்றி இருப்பது தம் கொள்கைக்கு முரண் படுதல்கொண்டு, தம்கொள்கைக்கேற்பப் பாடத்தை மாற்றிக்கொள்வது அறிவுடையார்வழக்கன்று; உண்மைகாணும் ஒரே திருநோக்குடையாருக் கது முறையுமாகாது. எனைத்தானும் வெற்றியொன்றே குறியென்போ ரிடம் வாதிக்க எம்மனோர்க்கு ஆற்றல் கிடையாது. இனி 5-ம் பத்துப் பதிகஅடிகளைக்கொண்டு பண்டிதரவர்கள் செய்யும் சூழ்ச்சியை விரிப்பன்.

"..........................நெடுஞ்சேரலாதற்குச்
சோழன் மணக்கிள்ளியீன்றமகன்....................."

என்பது 5-ம் பதிக மூலம். இப்பாட்டு செங்குட்டுவனைப்பற்றிப் பாடப்பட்டது. பாட்டுடைத்தலைவனின்முன்னோர்பெயர் முதலிற் கூறப்படுகிறது. நெடுஞ்சேரலாதன் முன்னவன். "நெடுஞ்சேரலா தற்கு.........மகன் செங்குட்டுவன்" என்று முடியும். இதனுடன் நின்றால் இடர் ஒன்றுமில்லை. ஆனால் இடையிற் "சோழன்மணக்கிள்ளி யீன்ற மகன்" என்று காணப்படுகிறது. எனவே, நெடுஞ்சேரலாதற்கும் சோழன்மணக்கிள்ளிக்கும் குட்டுவன் பெற்ற மகனாக இருக்கமுடியாது என்பது வெள்ளிடைமலை. "'நெடுஞ்சேரலாதற்கு.........மகன்' என்று முடிந்துவிட்டது." எனின், சோழன்மணக்கிள்ளியீன்றமகன் என விதந்துவருந் தொடரால் குட்டுவனைப் பெற்ற தந்தை சோழன் மணக்

கிள்ளி யென்பதை மறுக்கமுடியாதாகிவிடுகிறது. இச்சங்கடமான நிலையி லிருந்து தப்புவதற்குப் பலவழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. ஒன்று: 'சோழன் மணக்கிள்ளி' என்பதே பெண்பாற்பெயர் என்பது. இது சொல்லும்பொழுதே நில்லாது அழிகின்றது. ஆதலால், அதைவிட் டுப் பண்டிதரவர்கள் இதில் ஒரு வார்த்தை குறைகிறது என்றும், அக் குறைவு நிறைத்தற்குரியசொல் 'மகள்' என்றும், "சோழன் மணக் கிள்ளி" என்பதற்குப்பின் அவ்வார்த்தை வரவேண்டும் என்றும் வாதிக் கிறார்கள். எனவே "சேரலாதன்மனைவி சோழன்மணக்கிள்ளியின் மகள்; இவர்கள் இருவருக்கும் பிறந்தவன் செங்குட்டுவன்" என்பதே இவர்கள் முடிவு. மூலத்தில் வார்த்தை குறைவுற்றிருப்பதற்கு இவர்கள்கண்ட ஆதாரமென்ன? குறைந்தாலும், அது "மகள்" என்றுதான் இருக்கவேண்டு மென்றநிச்சயம் எதனால் பெறப்படுகிறது? அப்படிக்கொள்ளாவிடின், தம் கொள்கை நிலைபெறாதென்பதே விடையாயின், நடுநிலையாளரைச் சிறிது சிந்திக்குமாறுமட்டும் வேண்டிக்கொள்வேன். மக்கட்டாயமே சேரர்மரபு என்பதை அலையுறாத நிலைத்தமுடிபு எனக் கொண்டுவிட்டால், பின்னர் இவ்வடிகள் நிற்கும் இந்நிலையிற் பொருத்தமானபொருள் தாராவென்பது உண்மையே. அப்போது புதுவதோர் சொற்பெய்தமைக்கவேண்டிய அவசியம் ஏற்படலாம். ஆனால், வாதமே மக்கட்டாயமா மருமக்கட் டாயமா? என்றிருக்க, அவற்றுள் ஒன்றைத் தீர்ந்தமுடிபாகக்கொண்டு, அதனால் வரும் தொல்லைகளைத்தீர்க்க வழிகள் கண்டுபிடித்து அவ்வழி களின்மூலம் மக்கட்டாயமுறையே நிலைத்தது என்று முதலில் அடிப் படையாகக்கொண்ட அம்முடிவுக்கே வரமுயலுவது அல்லல்தரும் வல் வழக்காகும்.

பாரதியாரவர்களும் இவ்வடியில் ஒருசொற்குறைவதாகவே கொள் கிறார்கள்; கொண்டு, அச்சொல் ஏனைப்பதிகங்களிற்போல மனைவிப் பொருள்குறிக்கும் தேவிச்சொல்லாயிருக்கலாமென்று ஊகிக்கிறார்கள்.

என் சிற்றறிவுக்கெட்டியவரை உண்மையில் இவ்வடிகளிற் சொற் குறை வில்லை. சொல்லொன்றும் பெய்துகொள்ளாமலே இவ்வடிகள் பூரணப்பொருள்தருமானால், வீண்தொல்லை ஏனோ? சொற்பெய்து கொள்ளவேண்டியது பண்டிதரவர்கள் கொள்கைக்கு அவசியம். சொல் லின்றேல் அவர்கள்வாய்ச்சொல்லில்லை. பாரதியாரவர்கள்கொள்கைக்குச் சொற்பெய்துகொள்ளவேண்டிய அவசியமில்லை. மணக்கிள்ளிபெற்றாலும். மணக்கிள்ளிதேவி (மனைவி) பெற்றாலும் பலன் ஒன்றேயாம். இந்த

ஒருபாட்டாலேயே சேரர் மருமக்கட்டாயிகளே என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாம். அதனால் இனியும் இதனைச் சிறிது விரிப்பன். இப்பதிகங்கள் பாட்டுடைச்சேரரின் இருவித முதுகுரவரை (முன்னோரை)ச் சுட்டுகின்றன. தனக்கு அரசுரிமை வழங்கிய முன்னவன் ஒருவகையினன்; தன்னை ஈன்றோர் மற்றொருவகையினர். மக்கட்டாயமுறையில், தன்னைப்பெற்ற தந்தையே தனக்கு அரசுரிமைதரும் அரசன்; ஆகவே, இருவகைமுன்னோர் குறித்தற்கில்லை. ஆனால் மருமக்கட்டாயத்திலோ ஒருவன் தன்னைப் பெற்றோர்க்கன்றித் தன் தாய்வழிமாமனுக்கே வாரிசாகிநிற்றலால், பதிகம் பாடியவர்கள் இவ்விருதிறத்தாரையும் சுட்டிப் பாடுகின்றனர். "இன்னாருக்கு இன்னார் ஈன்ற மகன் இன்னார்" என்பதில் முதலில் நிற்பது பாட்டுடைச்சேரனுக்கு அரசுதந்த முன்னவன் (மாமன்) பெயர். இரண்டாவது நிற்பது ஈன்றவர்பெயர். இம்முறையில் இவ்வைந்தாம்பதிகத்தை நோக்குக. "சேரலாதற்கு (1)........மணக்கிள்ளி (2) ஈன்ற மகன்" (3) என்பது சேரலாதற்கு வாரிசான (வழித்தோன்றலான) மகன் குட்டுவன், மணக்கிள்ளி ஈன்றமகன் குட்டுவன் என இயையும். இதில் தவறென்ன? அதிசயமென்ன? குறையென்ன? சொற்பெய்துகொள்ளவேண்டிய அவசியமென்னவோ? குட்டுவன் மணக்கிள்ளி ஈன்ற மகனாகவே, சேரலாதனீன்றமகனில்லையென்பது தெற்றென விளங்கும். சேரலாதன் ஈன்ற மகன் குட்டுவனில்லை என்ற முடிபொன்றே மக்கட்டாயத்தை வேரோடுவீழ்த்தும் என்பதற்கு ஐயமுண்டோ?

இதுபோலவே 7-ம் பதிகத்தொடரமைப்பும் மருமக்கட்டாயத்தையே விசதமாக வலியுறுத்துகிறதென்பதைப் பாரதிபவர்கள் தம் கட்டுரையில் விவரித்துள்ளார்கள். அதனாலதைமீட்டும் விரித்தல் மிகை.

## VI. பதிகங்களில் மருகன் என்னாது மகன் என்றதேன்?

இனிப் பண்டிதரவர்கள் வாதமெல்லாம்—"நெடுஞ்சேரலாதற்கு மகன்" என்பது மருகன் என்று பொருள்தருமா? அவ்வாறாயின் "மருகன்" என்றே பிரயோகிக்காததேனோ? என்பதுதான். பாட்டமைப்பு அதற்கு இடந்தராது. "ஈன்ற மருகன்" என்ற முடிபு இழுக்காகும். ஈண்டுத் தன்னைப்பெற்றவர்க்கும், பெறாது தனக்கு அரசுதந்தமுன்னவற்கும் பொதுவான முறைகுறிக்கும் ஒருசொல்லன்றோ அமையவேண்டும். அதற்கு ஏற்றசொல் மகன் என்பதேயாகும். அரசுதரும் முன்னவரும் ஈன்றோருமான இருவகையினர்க்கும் உள்ள வித்தியாசம்

குறிக்க ஆசிரியர் "ஈன்ற" என்ற அடைமொழிகொடுத்துப் பெற்றதந்தையின்பெயரை அடுத்து நிறுத்திவைத்தார். ஈனுத தாய்வழித் தாயத்தந்தை பெயரைப் பதிகமுதலில் தொடுத்துச் சேய்மையில் நிறுத்தியமைத்தார். முன்னரே இவ்விஷயம் விரிக்கப்பட்டிருத்தலால் இனியும் பெருக்க இடம் கொள்ளேன்.

இன்னும், இனைய பல வெறும்வாதங்கள் பண்டிதரவர்களின் மறுப்புரையை நிறைத்துள்ளன. அவையனைத்தையும் ஈண்டு நிறுத்துரைத்து விலையிடுவது ஆற்றில் மணலெண்ணும் முயற்சிபோலாம். சிலவற்றை மட்டும் இங்கேமாதிரிக்காகப் பொறுக்கிக் காட்டினேன். ஆழ்ந்துநோக்கு பவரனைவர்க்கும் இவ்வாத ஆராய்ச்சியின் உண்மை இனிதுவிளங்கும். ஆதலால் இவ்வுரையை இதனெடுமுடிக்க விடைகொள்கின்றேன்.

*L.* கிருஷ்ணசாமி M.A., B.L.,
அட்வோகேட், மதுரை.

---

# தனித்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் சுக்கிலஹு பங்குனிமீ 20, 21, 22
(1930-ஹு ஏப்ரல்மீ 2, 3, 4)-ஆம் தேதிகளில் நடத்திய
தனித்தமிழ்ப் பரீக்ஷைகளிற் றேறிப்
பரிசும் யோக்கியதாபத்திரமும் பெறும் மாணுக்கர்களின்

## அபிதான பத்திரம்.

### பண்டிதபரீக்ஷை.

#### 1-வது வகுப்பு.

| தொடர் நம்பர். | ரிஜிஸ்டர் நம்பர். | |
|---|---|---|
| | 1 | நா. கனகராஜையர், தமிழ்ப்பண்டிதர், முனிசிபல் உயர்தரக் கலாசாலை, பொள்ளாச்சி, கோயம்புத்தூர் ஜில்லா. |

(முதற்பரிசு ரூ. 100 பெறத்தக்க தங்கத் தோடா).

---

## பிரவேச பரீக்ஷை.

### 1-வது வகுப்பு.

| | | |
|---|---|---|
| 1 | 20 | V. சுப்பிரமணியன், மாணவர், கணேசர் செந்தமிழ்க்கலாசாலை, மேலைச்சிவபுரி, புதுக்கோட்டை ஸ்டேட். |

(முதற்பரிசு ரூ. 50 பெறத்தக்க தங்கப்பதக்கம்).

| | | |
|---|---|---|
| 2 | 21 | அ. முத்துசாமி, மாணவர், கணேசர் செந்தமிழ்க்கலாசாலை, மேலைச்சிவபுரி, புதுக்கோட்டை ஸ்டேட். |

(இரண்டாவது பரிசு ரூ. 30)

### 2-வது வகுப்பு.

| | | |
|---|---|---|
| 1 | 23 | கா. நயினர்முகம்மது ராவுத்தர், கணியூர்ப் போஸ்டு, கோயம்புத்தூர் ஜில்லா. |
| 2 | 35 | L. S. சுப்பிரமணியஞ்செட்டி, தமிழ்ப்பண்டிதர், இந்து உயர்தரப்பாடசாலை, ஆம்பூர். |
| 3 | 25 | திரு. ஐயன்பெருமாள் கோன், 14-சின்னக்கடைத்தெரு, தெப்பக்குளம் போஸ்டு, திருச்சி. |
| 4 | 30 | கு. சுப்பையா, மாணவர், 6-வது வகுப்பு, வடமொழிக்கல்லூரி, திருவையாறு. |
| 5 | 50 | V. கோவிந்தராஜ நாயக்கர், காட்டுக்காநல்லூர், கண்ணமங்கலம் போஸ்டு, வடஆற்காடு ஜில்லா. |
| 6 | 27 | சி. ப. பொன்னுசாமிமுதலியார், மாணவர், நாட்டுமொழிக்கல்லூரி, திருவையாறு. |
| 7 | 37 | R. ஆண்டாளம்மாள், கவர்ன்மெண்ட் ட்ரெயினிங் பெண்பாடசாலை, கோயம்புத்தூர். |
| 8 | 17 | ரா. இராஜகோபாலையங்கார், தமிழ்ப்பண்டிதர், க்ஷத்திரிய வித்யாசாலை, விருதுநகர். |

*M. Dinakara,*
அக்கிராசனாதிபதி,
மதுரைத்தமிழ்ச்சங்கம்,
26—6—'30.

# ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் 1930ஆம் மார்ச்சுமீ 1உ நடத்திய ஆங்கில கலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷைகளிற் றேறி யோக்கியதாபத்திரம் பெறும் மாணாக்கர்களின் அபிதானபத்திரம்.

## எப். ஏ., பரீக்ஷை.

### 2-வது வகுப்பு.

| தொடர் நம்பர். | ரிஜிஸ்டர் நம்பர். | |
|---|---|---|
| 1 | 36 | K. P. சுப்பிரமணியன், St. Xavier's College, பாளையங்கோட்டை. |
| 2 | 45 | A. ராமசுவாமி, ஷை ஷை ஷை |
| 3 | 33 | L. சொக்கலிங்கம், ஷை ஷை ஷை |
| 4 | 53 | R. நரசிம்ஹம், ஸெண்ட் ஜான் காலேஜ், பாளையங்கோட்டை. |
| 5 | 98 | N. ராமச்சந்திரன், மஹாராஜா காலேஜ், புதுக்கோட்டை. |
| 6 | 100 | K. S. சுப்பிரமணியன், இஸ்லாமியா காலேஜ், வாணியம்பாடி. |
| 7 | 85 | A. M. பத்திரையசெட்டி, முனிசிபல் காலேஜ், சேலம். |
| 8 | 3 | கே. ஏ. சாமுவேல் ஜான்சன், பிஷப் ஹீபர் காலேஜ், திருச்சிராப்பள்ளி. |
| 9 | 39 | M. வைத்தியலிங்கம், St. Xavier's College, பாளையங்கோட்டை. |
| 10 | 55 | M. P. முத்தையா, ஸெண்ட் ஜான் காலேஜ், பாளையங்கோட்டை. |
| 11 | 125 | T. சுப்பிரமணியன், அண்ணாமலை யூநிவர்ஸிடி, அண்ணாமலைநகர், சிதம்பரம். |
| 12 | 7 | V. R. வெங்கிடாசாரி, கவர்ன்மெண்டு காலேஜ், கும்பகோணம். |
| 13 | 40 | V. கணபதி சுப்பிரமணியன், St. Xavier's College, பாளையங்கோட்டை. |

---

## மெற்றிக்குலேஷன் பரீக்ஷை.

### 2-வது வகுப்பு.

| | | |
|---|---|---|
| 1 | 235 | R. ஐயாசாமி, ஸ்ரீ ராமகிருஷ்ண குருகுல வித்தியாலயம், மயிலாப்பூர். |
| 2 | 206 | P. M. சுப்பையன், போர்டு ஹைஸ்கூல், உரத்தநாடு. |
| 3 | 164 | I. இஞ்ஞாசியம்மாள், அர்ச்இஞ்ஞாசியார் கலாசாலை, பாளையங்கோட்டை.|

| | | |
|---|---|---|
| 4 | 249 | P. திருஞானசந்தரம், நாஷனல் ஹைஸ்கூல், மன்னார்குடி. |
| 5 | 157 | T. V. முத்துசாமி, C. M. ஹைஸ்கூல், திருநெல்வேலி. |
| 6 | 237 | M. சடகோபன், பிண்டிலே காலேஜ், மன்னார்குடி. |
| 7 | 194 | P. கனகசபை, முனிசிபல் ஹைஸ்கூல், கூடலூர். |
| 8 | 152 | V. வெங்கோபராவ், C. M. ஹைஸ்கூல், திருநெல்வேலி. |
| 9 | 294 | N. ஜெயராமன், முனிசிபல் ஹைஸ்கூல், விழுப்புரம். |
| 10 | 283 | K. செங்கல்வராயன், ஹிந்துநாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி. |
| 11 | 134 | K. S. சீதாராமன், சௌராஷ்ட்ரா ஹைஸ்கூல், மதுரை. |
| 12 | 175 | S. நாகராஜன்; முனிசிபல் காலேஜ், சேலம். |
| 13 | 150 | S. பிச்சாண்டி, க்ஷத்திரிய வித்தியாசாலே, விருதுநகர். |
| 14 | 286 | K. செந்தியப்பன், ஹிந்து நாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி. |
| 15 | 300 | K. கன்னேயா ராவ், முனிசிபல் ஹைஸ்கூல், விழுப்புரம். |
| 16 | 173 | T. A. லக்ஷ்மிநாராயணன், முனிசிபல் காலேஜ், சேலம். |
| 17 | 160 | S. செசிலியம்மாள், அர்ச்இஞ்ஞாசியார் கலாசாலே, பாளேயங் கோட்டை. |
| 18 | 296 | P. S. வெங்கிட்டராமன், முனிசிபல் ஹைஸ்கூல், விழுப்புரம். |
| 19 | 185 | R. கிருஷ்ணசாமி. ஸெண்ட் மிக்கேல் ஹைஸ்கூல், கோயம் புத்தூர். |
| 20 | 297 | V. K. வேணுகோபாலன், முனிசிபல் ஹைஸ்கூல், விழுப்புரம் |
| 21 | 199 | B. இராமசாமிபிள்ளே, போர்டுஹைஸ்கூல், பண்ருட்டி. |
| 22 | 318 | N. S. ஷண்முகம், ஹிந்துஹைஸ்கூல், கோபாலசமுத்திரம். |
| 23 | 315 | V. மாணிக்கம், ஸ்ரீபூமீசுவரசுவாமி தர்மஉயர்தரக்கலாசாலே, ராமச்சந்திரபுரம். |
| 24 | 133 | S. சேதுராமன், சேதுபதிஹைஸ்கூல், மதுரை. |
| 25 | 181 | M. A. காதர்பாக்ஷா, முனிசிபல்காலேஜ், சேலம். |
| 26 | 208 | S. K. வரதராஜன், போர்டுஹைஸ்கூல், உரத்தாடு. |

*M. Dinakara*,
அக்கிராசனாதிபதி,
மதுரைத்தமிழ்ச்சங்கம்,
26—6—'30.